ஓம் விநாயக நம:

# சந்திர தீபம்

## சைவநீதி வளர்த்திடும் தமிழ்ப் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

வெள்ளிக்கிழமை [ 10-4-81 ]

ரௌத்திரி வரு. பங்குனி மாதம் 28-ம் நாள்

இதழ்: 4 சுடர்: 11

பேர் அருள் திருநூல் மலர்

RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

# உண்மையான சிவனடியார்களை போற்றும் மக்கட்கு இடரிலை கேடிலை ஏதம் வந்து அடையாது

## முற்றிலும் தம்மைச் சிவதொண்டிற்கு அர்ப்பணித்தவரே சிவனடியார்கள். உண்மைபேசல் பொருட்பற்றிலாமை வேடம் காட்டிக் கோலம் பண்ணாமை இவ்வளவும் உள்ளவராதல் வேண்டும்

### அந்த வழியில் சந்திரதீபம் உதயமாகியது

உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும் இவ்வுலகில் வழிகாண யாருக்கு தகுதி உண்டு எனக் கேட்கின் உண்மையான வழி சிவதொண்டு புரிவாராலேயே முடியும்! இவரை விடுத்து எந்த அரசியல் வாதியாலேயோ அல்லது அரசியல் வாதிகள் சேர்ந்த கூட்டணிகளாலோ அல்லது எந்த அரசாங்கத்தாலேயோ உலக மக்களை பகையின்றிக் காத்திட முடியாது. நாட்டில் இனப்பகை குரோதம் வராமல் காத்திட முடியாது.

ஜனநாயகவழி இயங்கும் பல அரசாங்கங்களின் கீழ் உள்ள நாடுகள் இன்று இனப்பகையாலும் கொலையாலும் கொடுமையாலும் நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் செல்கின்றதே அன்றி எந்த ஒரு நாட்டில் ஒரு அமைதியான நிலையை நாம் இன்று காண முடியும்? இலங்கையின் நிலை என்ன? இங்கிலாந்தின் நிலை என்ன?

அமெரிக்கா போன்ற வல்லரசுகள் ஆயுதங்களில் மிகக் கொடுமையான அணுக்குண்டு முதல் பலவற்றையும் வைத்திருக்கின்றன. இவற்றால் அமெரிக்கா என் செய்ய முடியும்! பல உயிரை ஒரே தடவையில் கொன்று மிகுதி மக்களை அச்சத்தின் பேரில் ஒடுங்கி இருக்கச் செய்ய முடியும்.

ஆனால் இந்த அணுக்குண்டு இனப்பகையால் பரிதவித்து வாடி வதங்கும் மக்களை என் செய்யும்! இனப்பகையை நீக்க அணுக்குண்டு உதவுமா? இதை அறிவாளிகள் கூர்ந்து சிந்திக்க வேண்டும். ஆத்திரத்தால் மனவிகாரத்தால் மிருக வெறியால் பீடித்த மனிதரை அணுகுண்டோ அல்லது ஏவாயுதமோ எதுவுமே ஏதும் செய்யாது.

ஆனால் மிருகவெறிபோல் கொலை கொள்ளைகளில் ஈடுபடும் மக்களையும் அத்தகைய குரோதவிரோத மனப்பாங்கை ஏற்படுத்திவிடும் வஞ்சகராய அரசியல் வாதிகளையும் மேற்கு நாடுகளில் இருந்து இங்குவந்த புறச் சமயங்களைச் சேர்ந்த பாதிரிமாரையும் தத்தமது கொடுமையும் வஞ்சமும் நீங்க வழிகாண்பது சைவமக்களிடையே எழக்கூடிய தவநெறியின் வலு ஒன்றேயால் ஆகும். இதனை நாம் இங்கு உண்மையாம்படி எடுத்துக் கூறுகின்றோம். மிகைபடச் சொல்லவில்லை.

ஏன் அப்படியாக நாம் ஏனைய சமயங்களையும் குறிப்பிடாது சைவ நன்னெறியை மட்டும் குறிப்பிட்டோம் என்றால் தூய சைவ நன்னெறி ஒன்றிலேதான் புண்ணியம் உண்டு. மற்றவைகளில் பாவம் கலந்த பல பழிகள் உண்டு. உதாரணமாக கொலை கொள்ளை இவற்றை இரகசியமாகத் தூண்டிவிடும் பாதிரி சமயங்கள் பேச்சளவில் பகைமையிலாது போல் போதித்து செயலளவில் அப்படி இலாது வஞ்சனையின் துர்ப்போதனைகளையே செய்கின்றார்கள்.

ஒருநாள் மானிப்பாய் வீதியில் சில இளைஞருடன் ஒரு பாதிரி சமயத்தைச் சேர்ந்தவர் ஒரு வார்த்தை பேசிட நான் கேட்டுத் திடுக்கிட்டேன். பல அல்லலையும் தமிழன் பிறரால் பட தமிழனில் ஒருவனுக்கும் துணிவில்லை! திருப்ப அடிக்க எங்கள் மக்களும் அப்படிச்செய்து நாலுபேர் போனால் என்ன? என்று கூறினர்.

அப்பொழுது அவரை எனக்குத் தெரியாது எனினும் அவரை நோக்கி நிராயுதபாணிகளாய் இருக்கும் தமிழ் மக்களிடத்தே இத்தகைய வார்த்தைகளை நீங்கள் பேசினால் அடுத்தால் போல் என்ன நடக்கும், இதனாலே யார் பாதிக்கப்படுபவர் என்று சிந்தித்தீர்களோ! ஒரு காரியத்தை நாம் தொடங்கிட முன் என்ன பின்னால் வரும்? அப்படி வந்தால் அதற்கு பாதுகாப்பு யாது? என்று தெளிந்த பின் அல்லவோ செயல்பட வேண்டும் என்றேன்.

அதற்கு கால்சட்டையுடன் நின்ற பாதிரி சமயத்தவர் அங்கு நின்ற இளைஞரிடம் இவையைப் போன்ற கோழைகளால்தான் சிங்கள மக்கள் எங்கட்கு பெரும் அநியாயம் செய்கிறார்கள் என என்மீது கோபிப்பார் போன்று வெறித்துப் பார்த்துப் பேசவும் நாம் அவருடன் மேற்கொண்டு கதைப்பதில் பயனில்லை என மீண்டு கொண்டேன்.

ஏனெனில் புண்ணியத்தில் கொலைக்கு இடமில்லை. இன்னமும் வேறு வேறு களவு பொய் இவற்றிற்கும் இடமில்லை. புண்ணியம் எப்பொழுதும் மேல் நிலையிலே மனிதனை வைக்கும். ஒருபோதும் கீழ்மைப் படுத்தவிடாது. ஆனால் செய்த பாவம் இன்னமும் இன்னமும் கீழே கொண்டுபோகும்! இந்த ஒரு நிலையை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

புண்ணியத்தின் விளைவு உயர்ந்த சிந்தை! தன் உயிர் போனாலும் பிற உயிரைக் கொலை செய்யாத சிந்தை இரக்கம் சுயநலமின்மை கபடமின்மை இவைகளாகும்.

உயர்ந்த புண்ணியத்தின் விளைவிலேதான் நாயன்மாரது தேவாரங்கள் எழுந்தன. வேதங்கள் நான்கும் எழுந்தன. ஆகமங்கள் யாவும் எழுந்தன!

ஆனால் பத்ததிகள் மட்டும் புண்ணியமிலாத சுயநலத்தின் வஞ்சனையிலும் வித்துவச் சேட்டையிலும் பொல்லாத இருளாய ஆங்காரத்திலும் எழுந்தன. அதனாலே தான் பத்ததிகளால் எழுந்த பழுதுகள் பற்றிப் பலகாலும் நாம் குறிப்பிட்டு ஐயோ சைவநெறியில் பத்ததிகள் வேண்டாம். பூவும் நீரும் புனிதமும் நல்ஒழுக்கமே எங்கள் பத்ததியாகட்டும் எனக் கூறினோம்.

புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு. அன்னால் அருள் உண்டு. என எம் நாயன்மார் தமிழ் வேதம் பாடினார். அல்லாது பத்ததி மேலானதாக இருந்தால் இன்ன பத்ததியின் படி 33 குண்டம் 1008 குண்டம் போடுங்கோ என்றிருப்பார்.

அக்கினி காரியம் ஒரு குண்டம் தான். செந்தீவளர்ப்பது ஒரு குண்டத்தில்தான். அதுவே சிவாக்கினி. இதை உணராது பழிகாரப் பிராமண சமுதாயம் எவ்வளவு பழுதுகளை நம்மிடையே பெருக்கி நாட்டையே இன்று கொலைமேற் கொலை நிகழும் பிணக்காடாக்கிவிட்டது. ஐயோ இந்தப் பத்ததிக்காரப் பிராமணர் அடியோடு இந்நாட்டால் நீங்கினால் அன்றி இலங்கை நகரில் கொலை கொள்ளை கலவரம் நீங்காது.

முன்பு ஒருநாள் கீரிமலையில் ஒரு யாகம் செய்தார்கள் தமிழனுக்கு வெற்றிவர! அதற்குப் பிராமணர் எங்கோ ஒருபத்ததி காட்டிச் செய்தார். யாகம் எப்படி முடிந்தது. பிறகும் இந்தப்பிராமணர்கட்கு ஏதும் நல் உணர்ச்சி உண்டா? பிறகும் ஏன் பத்ததியின் பேய்க்கோலம்! ஆபாசமான கொடுஞ்செயல். ஐயோ சொல்ல வாய் கூசுகிறது! இந்தப் பழிகளை எழுதும் என் கைக்கு ஏதாகிலும் நோய் வருமோ எனக் கூட நாம் அஞ்சுகிறோம். அவ்வளவு தூரம் பிழையான செயல்களை பிராமணர் செய்து ஏமாற்றிப் பிழைக்கும் ஒருவராக வந்திட இந்தப் பாதகர்களை நம்பி நாடு பயத்தால் ஒன்றும் பேச இயலாது செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைச் செய்யட்டன் கடவுள் கேட்கட்டன் என்ற ஒரு பேதமையான நிலையில் சைவநெறியில் பழுது செய்வாரைத் தட்டிக் கேட்க முடியாத நிலை வந்துளது. நாம் என்ன செய்யலாம். நமது பணி சிவன் அருளின் தொடர்பான படியால் குற்றத்தை உள்ளவாறே சொல்ல வேண்டிவருகின்றது.

சந்திரதீபத்தின் செயல் முற்றிலும் சிவன் செயல். இதற்கு மேலாக நாம் ஏதும் சொல்ல முடியாது. தனது அடிமைத்திறத்தின் பெருமையை சைவ உய்வின் பொருட்டாக சிவனே சொல்லத்தொடங்கி உள்ளான்.

யாவராலும் அன்பரன்றி அறியொணா மலர்ச்சோதி நம்மை இப்பணியில தாமாக ஆட்படுத்தி அடியேனை முற்றிலும் தன் பணிக்கே ஆளாக்கி விட்டது. அவரது உண்மை நின்ற அடியவராகும் சம்பந்தப்பெருமான் முதலிய பெருமக்கள் பதிகங்களை ஆதாரமாகக் கொண்டு அவர்களது ஒழுக்க நெறியை சந்திரதீபம் தனக்கு எல்லை வரம்பாகக் கொண்டு தன் பணி புரிகின்றது. அவர்கள் ஒழுகிக் காட்டிய வழியை சந்திரதீபம் சிறிதும் தளராது பின்பற்றுகிறது. இதுவன்றிச் சைவர் என்ற கோட்பாட்டில் திருநீறு அணியும் அத்தனை மக்களையும் அவர்களது வழியைப் பின்பற்றுமாறு வேண்டுகிறது.

உண்மையான அடியார்கள் ஒரு மாதிரியான வேடமோ அல்லது சிறப்போ தாம்கொள்ளார்கள். அவர்கள் யாவரும் நன்மை தீமை என்ற பேதம் அறியாத முற்றிலும் அன்பாகி நிற்கும் வழியிலே சென்றவர்.

அவர்கட்கு எவருடனேனும் பகை இல்லை. ஆனால் பிழையைப் பிழை என்று சொல்லக் கூசார்கள். பிழைகண்டால் அந்த இடத்தில் நிற்கவும் மாட்டார்கள். அந்த இடத்தால் உடன் நீங்கிடுவர். அடுத்துதான் ஒரு பொருள் தன்னால் இவ்வுலகத்தில் சீர்திருத்தம் வருகின்றது என்று கூடி எண்ணார்கள். அவர்கள் தம்மைப் பற்றி எண்ணாது தம்மை துறந்து தலையான நெறியில் நின்றவர்.

அவர்களது பாதத்தை சந்திரதீபம் முற்றிலும் நம்புகின்றது. அவர்கள் இறைவனை அணுகியவர்கள். இறைவனைக் கண்டு அள்ளி மொண்டு அதிலே மெய்மறந்து இருப்பவர்கள். அவர்கள் வளர்த்த சைவநெறியை சந்திரதீபம் தானும் வளர்க்க முற்படுகின்றது.

கீழே தரப்படுகின்ற தேவாரத்தை நாம் எடுத்துக் கொண்டால் முற்றிலும் தம்மைச் சிவதொண்டிற்கு மட்டுமே துணிபுடன் ஆளாக்கினாரைத் தொழுவார்க்கே துன்பம் வந்தடையாது செல்வம் ஓங்கும் திருவருள் கூடிடும் என்றால் இனி நாம் உண்மைத் தொண்டின் பெருமைபற்றி விரித்தோதிடவும் வேண்டுமோ.

நாம் பிற என்ன சொல்லாம் சைவநெறி ஓங்கிட வேண்டுமெனின் உண்மையான தொண்டுபுரிவாரையே இவ்வுலகம் வேண்டுகின்றது. சிவனிற்குரிய தொண்டுகள் மதிப்பிற்குரியனவாய் இல்லாது பணம் பெறும் நோக்கமாக வந்தவுடன் தொண்டில் பேதமைகளும் ஏமாற்றமும் பெருகிக் கொண்டன.

அநாதிமல முத்த சித்துருவாய் திருவருள் என்னும் பிராட்டியுடன் கலந்து நிற்கின்ற பரிபூரணானந்த சொரூபத்தைப் பேணுதற்கு பணமும் வேண்டுமோ? றேட்டும் பேசவேண்டுமோ? இந்தப் பண ஆசை அநியாயத்திலேதான் சிவதொண்டு அவதொண்டாக மாறி தமிழினம் இன்று பெரிய ஒரு பழியான இருளால் மூடப்பட்டு இந்த உலகில் வாழும் மக்களுள் சீர்குன்றி நெறிகெட்டு அல்லல்படுகின்றது. அடியின்மேல் அடிவாங்கி சூட்டின்மேல் சூடுவாங்கி உதைபட்டும் சுதந்திரம்பெற முடியாதிருக்கின்றது. எமக்குத் துன்பம் செய்தவர்மேல் ஓங்கவும் துன்பப்படுகிற நாம் கீழ்மைப்படவும் வந்த நிலையின் காரணம் என்ன? இச்செயலுக்கு பொறுப்பு பிறர் என்று நாம் சொல்லலாமா?

தெய்வம் எல்லார் சித்தத்திலும் உண்டு என்பது வேதவாக்கியம். நான்கு வேதங்களின் ஏகமுடிவு இதுதான். இதை நம்மக்கள் உணர்வதில்லை. சிங்களவர் சித்தத்தில் தெய்வம் இல்லை; தமிழர் சித்தத்திலா தெய்வம் இருக்கிறார்?

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று மாணிக்கவாசகர் கூறினால் சிங்களவரை வித்தியாசமாகக் காண்பாரா சோனகரை வித்தியாசம் காண்பாரா. ஆகையினாலே பிறர் ஒருவர் தம்மைத் துயர்படுத்துவதற்கு நாம் செப்பமாக இருந்தால் பிறரிடத்திருக்கும் தெய்வம் நம்மை அவர் துயருறுத்த அனுமதிக்குமா? ஒருபோதும் அனுமதியாது. கருணையே வடிவமான அந்தப் பொருள் ஒருபோதும் பிறருக்கு வலியுடையவர் துன்பம் செய்யப் பார்த்திருக்காது. இதற்குச் சான்றாக முப்புரம் எரித்தமை இயமனை உதைத்தமை காமனை எரித்தமை முதலிய பல சிவனது செயல் மூலம் நாம் அறியலாம். எல்லோர்க்கும் அனுக்கிரகம் புரிந்த கடவுள் தானே தவநெறியில் நிற்கின்றான் எனத் திருநாவுக்கரசர் உலகிற்கு சொல்லிக் காட்டுகிறார். தவநெறிகள் சாதிக்கவல்லான் தன்னை எனக் கூறுகிறார்.

இன்னும் சொல்லுகிறார் மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சில். அதனை அடுத்து மேலாக நீ செய்வன செய்யக் கண்டும் வேதனைக்கு ஆளாகி நாளும் நாளும் ஆற்றேன் அடியேனை அஞ்சல் என்னாய் எனக் கூறுகிறார். இவை எல்லாவற்றையும் எம் சித்தத்துள் கொள்வோமாகில் சிவன், யாருக்கும் பாரபட்சமாக நடவான் தனித்து ஒரு சமூகத்தையோ அல்லது ஒரு சாதியையோ தாழ்மையாக்கி மற்றயரை உயர்த்தவும் மாட்டார் என்பது தெளிவாகிறது. இதனாலே எங்களுடைய பெருமானை போற்றுதல் புரியும் பிராமணச் சமுதாயம் முதல் தமது தொண்டை மறந்து தமிழினை மறந்து நீதியை மறந்து தருமத்தை மறந்து பணமும் புகழும் விலாசமும் என்றவகை சமய வியாபாரிகளாகிட இந்தச் செயல் சிவநிந்தையுடன் சிவத் துரோகம் ஆகியது. எல்லாத் துரோகத்திலும் பொல்லாதது சிவத்துரோகம், சிவன் சொத்தை தகாதவழி அபகரித்தவர். சிவன் பேரில் ஏமாற்றம் செய்தவர் யாவரும் அசுரரது கொடுமையில் சிக்கி பெரும் அல்லல்படுவார்.

கந்தபுராணத்து தக்கனுடைய வரலாறே சிவநிந்தனையும் துரோகமுமாக அமைந்தது. தக்கன் வரலாற்றின்படி எத்தனையோ தேவர்கள் அசுரரால் மெலியப்பட்டு அல்லல் பட்டதை நாம் அறிவோம். அதை யாரும் மறைக்க முடியாது.

ஆனால் அன்றைய தக்கனிலும் இன்றைய பிராமணர் மிகப் பொல்லாதவர். தக்கனுக்கு ஆட்டின தலை வைக்கப்பட்டது. ஆனால் இன்றைய பிராமணர்க்கு என்ன தலைவைப்பது! கோயில் நிர்வாகஸ்தர்கட்கு என்ன தலைவைப்பது? இதைத் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது.

ஐயோ இன்றைய பிராமணர்களை கொடுவெய்யிலில் கொண்டு சென்று நிறுத்தி நெற்றியில் கல்லு வைத்து தண்டித்தாலும் கூட இவர்கள் எம் நாட்டில செய்த பழிபாதகங்கள் தீராது. இந்தப் பாவிகளின் பாவப்பெருக்கத்தால்தான் நாட்டில் நன்மை குன்றி தீங்கு பெருகுகின்றது.

என் வாழ்நாளில் கடவுள் பேரில் ஏமாற்றம் செய்யாத ஒரு பிராமணரைக் காணமுடியாது. பேசுகிறது பொய். கடவுட்குரிய பொருளைக் களவாடுவது. கற்பழித்தல் முதலிய மிக மிகக் கேவலமான செயலை இன்றைய பிராமணர்கள் செய்கிறார்கள். ஆனதினாலே இவர்கள் செய்கிற எந்தக் கிரியை உண்மையாகவரும். இதை இவர்கள் விளங்கப்படுத்தட்டும். எந்த ஒரு கோயிலில் பிராமணர் உண்மையாய் நடக்கிறார்.

ஆகையால் இந்தப் பழிகாரக் கூட்டத்தினை குரு என்று சொல்லிப் பின்பற்றும் மக்கட்கு அடிவிழாதோ? கெடுதிவராதோ நோய்வராதோ? என்ன என்ன கேடுதான் வராது? இதைத் தமிழ் மக்கள் சிந்திப்பது நலம். பாவியால் உலகில் தீமையைப் பெருக்கலாமே அன்றி புண்ணியத்தை வருவிக்க இயலாது.

புண்ணியம் தான் பகை இனக் கலவரம் குரோதம் முதலிய தீங்குகளின் நின்றும் பாதுகாத்திடும். இதனாலே எம்பிரான் சிவனைப் புண்ணியன் என்பார்கள். புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே என பெரியோர் கூறுவர். சிவனை உண்மையாம்படி பூசிப்பார்க்குத்தான் நல்ல நெஞ்சம் உதயமாகும். நல்நெஞ்சம் உடையவர் திருவருட் பாதுகாப்பிற்கு என்றும் உரிமையாவர். இதனைத் திருநாவுக்கரசர் ''நல்லார்க்கு தீயை அல்லை'' என எம்பிரானை மொழிகின்றார்.

நன்மைக்கு ஒரு சிறப்பு கெட்ட நடத்தை உடையாரை அண்டி வாழாதிருத்தல். உதாரணமாக கள்ளப் பிராமணப் பழிகார நிர்வாகி இவர்களின் கீழ் உள்ள கோவில்கள் போய்க் கும்பிடாதிருத்தல் முதலியனவாகும். இதனை யோக சுவாமிகள் தமது ஒரு பாடலில் ''சீரான அடியருடன் கூடு'' என்கின்றார்.

பிராமணன் முதலாளி தொழிலாளி பல வேலைக்காரன் என்ற பாகுபாடு கோயில் தொண்டு செய்வாரிடம் இருக்கக் கூடாது. எம்பிரானுடைய கோயிலில் எத்தொண்டு செய்வாரும் அடியவரே. அவர்களில் உள்ள நல்ல ஒழுக்கத்தையே நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த நிலையில் பணம் இடைப்புகுந்தால் அது பின்னர் வேற்றுமைகட்கு உடனாகி கீழ் நிலையை உருவாக்கும். இன்று எல்லாக் கோயிலிலும் கீழ் நிலையில் இருப்பதற்குக் காரணம் பணம்தான். சம்பந்தப் பெருமானது இந்த தேவாரத்தை நோக்கினால் எங்காகிலும் ஒரு இடத்திலாவது பணம் விலாசம் முதலிய பேய்த்தனங்கள் காணப்படுகிறதா?

உண்மை அன்பும் பத்தியும் அடிமைத் திறமும் கபடமற்ற கொள்கையுமே காணப்படுகிறது. ஆதலின் இவைகளை உணர்ந்து பூரணமான அன்பு நெறியில் அருள் நெறியில் சைவமக்களில் நாலு பேராதல் வாழ்ந்தால் நாட்டில் ஒரு தீங்குமே என்றும் தமிழ் மக்கட்கு ஏற்படாது; நம்மில் உள்ள பிழையை நாம் உணராமல் பிறரை நோவதில் மேடையில் வீரப்பேச்சுகளால் கொக்கரிப்பதில் என்ன பயன் பெறக்கூடும் என்பதை சைவஉலகமே சிந்தி!

# சிவன் உடைய உண்மைத் தொண்டர் தொண்டரை தொழுது அடிபணிவரர்க்கு எத்தீங்கும் நேராது எனும்பதிகம்

பண் — நட்டராகம் (2–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே யொற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள் சூழ்ந்தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற் கொழுந்தே யென்றெழுவார்கள்
சால நீள்தலமதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே.

நீலநிறம் விளங்கிடும் கண்டம் உடையவனே! நெற்றி ஓர் கண் உடையவனே! தனியான இடபத்தை உடையவனே! சூலம் பிரகாசிக்கும் கை உடையவனே! நெருங்கிய பசிய சோலைகள் சூழ்ந்து அம்மரங்களில் மலரும் கோலம் நிறைந்த மலர்கள் வாசனை மணக்கும் திருக்கோட்டூர் என்னும் தலத்தில் அமர்ந்த நல்ல சுடர்க்கொழுந்தே என்று தொழுது சிந்தை தூய்மையாக எழுவார்கள் மிகவும் நீண்ட இத்தலத்திடை புகழ் மிகுந்த வாழ்க்கையை பாங்கினால் பெற்றுக் கொள்வார்கள்.

இப்பாடல் சோதியாய பெருமானின் திருவடிவும் தொழுவார் பெறும் பேறும் கூறப்படுவது! கொழுந்தே என்று எழுவார்கள்என்பது நித்தலும் தொழுதபின் தம் கருமம் செய்யப் பழகிக் கொள்வார்கள் என்பதாகும்; எழுவார்கள் என்பது அவரவர் கொண்ட சீலத்தைக் குறிப்பதாகும், உயர்ந்த ஒழுக்கமாகும். தருமம் தயை பத்திமை இவற்றைக் குறிப்பதாகும். எழுச்சி என்பது சோம்பல் முதல் கொடிய சோர்வுகளை நீக்கும்படியானது. சித்தம் உலக பந்தங்களில் ஆழாது மேல் நிலைப்படலைக் குறித்தது!

இதனாலே தயவு செய்து இறை வழிபாடு எல்லாத் தீங்கினையும் காமம் குரோதம் முதல் தீங்குகளையும் நீக்கிக் கொண்டார்க்கே பயனாகும் என்பதை எல்லாரும் உணர வேண்டும்; கோயிலை எந்த விதமான பகை கோபம் இவற்றிற்கு ஆளாக்காதீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்க யம்மலர்ச் சீறடிப் பஞ்சுறு மெல்விரல் அரவல்குல்
மங்கை மார்பலர் மயில்குயில் கிளியென மிழற்றிய மொழியார்மென்
கொங்கை யார்குழாங் குணலைசெய் கோட்டூர்நற் கொழுந்தேயென்
றெழுவார்கள்
சங்கை யொன்றில ராகிச்சங் கரன் திரு அருள்பெறல் எளிதாமே.

தாமரை மலரை ஒத்த சிவந்த சிறிய பாதமும் செம்பஞ்சு போலும் மெல்லிய விரல்களும் நாகபாம்பின் படம் போன்ற அல்குலும் கொண்ட பெண்கள் பலர் மயிலும் குயிலும் கிளியும் என்னும்படி மழலைச் சொற்கள் பேசும் மொழி உடைய வரும் ஆன பெண்கள் குணலைக் கூத்து ஆடியருளும் திருக்கோட்டூர் என்னும் தலத்தில் இருக்கும் நல்ல சுடர்க்கொழுந்தாகிய பெருமானே என எண்ணிவாழ முனைவார்கள் வாழ்வில் ஏதும் சங்கடம் ஒன்றும் இல்லாதவராகி சிவனது திருவருள் பெறல் இலகுவாகும்.

சங்கை என்பது சங்கடம் என்றதாகும். உண்மையாம்படி சிவனை வழிபடுவார் ஏதும் தீங்கு நெறிக்கு ஆழாகார் என்றபடி! அத்தகைய பெருமக்களை எந்தப் பகையும் வெல்ல மாட்டாது! யாரும் துயருறுத்த மாட்டார்கள்! சிவனருள் அவர்களைப் பாதுகாக்கும் என்றவாறு.

சோதியாய் அளப்பரிய சுடர் ஒளியாய் நிறைபவன் எம்பெருமான் என்றவாறு. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆநந்தபூர்த்தியாக அருளொடு நிறைந்த பொருள் என்றவாறு.

திருக்கோட்டூரில் சுடர் ஒளியே இருப்பது ஆதலால் அதனை நினைவார்கள் என்றதேயாகும். சங்கரன் என்பது யாவர்க்கும் சுகம் தருபவன் என்றவாறு! 2

நம்ப னார்நல மலர்கொடு தொழுதெழும் அடியவர் தமக்கெல்லாம்
செம்பொ னார்தரும் எழில்திகழ் முலையவர் செல்வமல்கியநல்ல
கொம்ப னார்தொழு தாடிய கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
அம்பொனார்தரு முலகினில் அமரரோ டமர்ந்தினி திருப்பாரே.

நல்ல பூக்கள் கொண்டு தொழுது எழுகின்ற அடியவர் தங்கட்கு எல்லாம் நாயகமாயவர். செம்பொன்னினை ஒத்த எழில் அழகு விளங்கிடும் முலைஉடைய பூங்கொம்பு போலும் பெண்கள் தொழுது ஆடி வணங்கிடும் திருக்கோட்டூர் என்னும் தலத்தில் இருந்தருளும் நல்ல சுடர்க்கொழுந்தாயவனே என்று முழுவதும் நம்பிய மனத்துடன் எழுவார்கள் அழகிய பொன் விளங்கும் உலகினில் வாழும் தேவர்களுடன் இனிதே பொருந்தி வாழ்வார்கள்.

பூவும் நீரும் கொண்டு வழிபடும் மக்கட்கு எல்லாச் செல்வமும் தரப்படும் என்பது துணிவாகப் பேசுகின்றார். நம்பனார் நல்ல மலர்கொடு தொழுது எழும் அடியவர்க்கு என்பதை பூவும் நீரும் கொண்டு வழிபார்க்கு இனிய தலைவன் என்றவாறு கூறப்படுகின்றது. நம்பனார் என்பது நம்பிக்கைக்கு பாத்திரமாயவ என்பது. திருக்கோட்டூரில் சுடர்க்கொழுந்தாக எம்பிரான் இருந்தருளுகின்றான். முன்னர் காலங்களில் பெண்கள் நடனமாடிப் பணியும் சிறப்புக்கள் பேசப்படுகின்றது. சிவனை வழிபடும் சிறப்பால் அழகிய பெண்கள் உற்பவித்தலும் அத்துடன் அவர்கள் வீட்டிற்கு ஒரு இலக்குமியாவதும் பேசப்படுகின்றது. செல்வம் மல்கிய கொம்பனார் என்பது நல்ல பத்திமை உடைய பெண்கள் வாழும் நாட்டில் எத்தீங்கும் நேராது என்றபடி! அத்துடன் வீரம் புகழ் பொருட்பேறு புத்திரபாக்கியம் முதல் எல்லா நலனும் வந்து எய்தும் என்பது குறிப்பு. பெண்களும் மெய்மறந்து தொழுது ஆடும் அற்புத நிலை பேசுகின்றார். 3

பலவு நீள்பொழில் தீங்கனி தேன்பலா மாங்கனி பயில்வாய
கலவ மஞ்ஞைகள் நிலவுசொற் கிள்ளைகள் அன்னஞ் சேர்ந் தழகாய
குலவு நீள்வயற் கயலுகள் கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
நிலவு செல்வத்த ராகிநீள் நிலத்திடை நீடிய புகழாரே.

பலவாக நீண்ட மலர்ச் சோலைகளும் தித்திப்பான கனிகள் தருகின்ற தேன் சொட்டும் பலாப்பழம் மாங்கனி இவை நிரம்பிடப் பயின்று உண்டு மகிழும் நற்சிறப்புடைய மயில்கள் நல்ல சொற்கள் பயிலும் கிளிகள் அன்னங்கள் இவையாவும் சேர்ந்து அழகுடனே விளங்கிட நீண்ட வயல்களில் உள்ள நீரில் கயல் மீன்கள் உழுது கிழத்தோடும் வளச் சிறப்பினை உடைய திருக்கோட்டூரில் இருந்தருளும் நல்ல சுடர்க்கொழுந்தே எனத் துதித்து எழுவார்கள் என்றும் விளங்கிடும் செல்வமுடையவராகி நீண்ட நிலத்திடை புகழ்மிகுந்தவராக வாழ்வார்கள்.

செல்வம் குன்றாது நிலவும்! சிவனைத் துதிப்பார்கட்கு என்றதாகும். நிலம் நீண்ட பரப்புடையது என்பது குறிக்கப்பட்டது. திருக்கோட்டூரில் கனிகளின் சிறப்பும் சோலைகளின் வனப்பும் கூறப்படுகின்றது. நீடிய புகழ் என்பது பல சந்ததிக்கு அழியாத புகழ் என்றவாறு.

சிவனை வழிபடும் பெருமை இங்கு தாம் தாம் வழிபடும் சிறப்பால் பேசப்படுகின்றது. இதனாலே சிவனைப் பூசித்தற்கு இன்னார் இவர் என்ற ஒருவகை மக்களைக் கூறாது பலரையும் கூறப்படுகின்றது. மலர்ச்சோலைகள் பலவாக இருந்தன என்பது குறிப்பு. 4

உருகு வாருள்ளத் தொண்சுடர் தனக்கென்றும் அன்பராம் அடியார்கள்
பருகும் ஆரமு தெனநின்று பரிவொடு பத்திசெய் தெத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
அருகு சேர்தருவினைகளும் அகலும் போய் அவனருள் பெறலாமே.

எம்பெருமானே என நினைந்து உருகும் உள்ளத்தை உடைய மக்கட்கு தெள்ளிய சுடர்க்கொழுந்தாயவர்; அவர்க்கு என்றும் அன்பராகும் அடியார்கள் அள்ளிப்பருகும் தெவிட்டாத கிடைத்தற்கரிய அமுது. அவரையே பரிவுசெய்து எத்திசையும் நின்று போற்றி பறவைகள் வாழும் வயல் சூழ்ந்த கோட்டூரில் நல்ல சுடர்க்கொழுந்தே எனப் போற்றி எழும் அடியார்கள் அருகாக வந்து சேரும் கொடிய வினைகளும் போய் அகன்றிடும் அவனுடைய அருளும் நாம் பெறலாகும்.

என் அகச் சோதியே என உள்ளம் உருகுதல் பேசப்படுகின்றது. வேறொரு நினைப்புமின்றி அவன் திருவருளே கண்ணாகக் காணும் நிலை பேசப்படுகின்றது. அவர் சுவாமி இவர் மடாதிபதி அவர் பெரியர் இவர் சிறியர் என்ற பேதமைகளை விடுத்து அவன் ஒருவனே என முழுப் பற்றுடன் பற்றக்கூடிய மக்கட்குத்தான் உள்ளம் உருகும் நிலை ஏற்படும்.

ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி என திருமுருகாற்றுபடையிலும் தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டு உண்டுண்டிருக்கும் சுத்த ஞானம் என்னும் தண்டையம் புண்டரீகம் எனவரும் கந்தர் அலங்காரப்பாடல் இப்படியான்ன இன்னமும் அநேகமுண்டு. பருகுதோறும் அமுதம் ஒத்து அவர்க்கே தித்திப்பாக இருக்கும் எனவும் பல பெரியோர் கூற்றும் இப்பாடலுடன் ஒப்பநோக்க. அள்ளிப்பருகும் இன்பநிலை பேசப்படுகின்றது.

இதற்காகவே யாவுமாய் மனம் கடந்த மோனவீடு அடைந்து ஒருங்கியான அவா அடங்க என்று பெறுவேனோ என்கிறார் அருணகிரியார்.

அருகு சேர்தரும் வினை என்பது முன்னர் செய்து கொண்டமைக்காக ஏற்படும் அநுவிப்புகள். அவை உள்ளியர் தெள்ளியர் என்பது பாராது மெல்ல நுழையும். அதுவுமன்றி சிவனது அருளும் பெறலாகும. அவனருள் பெற்றுக்கொண்டால் பின்னர் பேசவும் வேண்டுமோ! மண் பெண் பூமி என்ற மயக்கத்தால் வாடவும் வேண்டுமோ? 5

துன்று வார்சடைத் தூமதி மத்தமுந் துன்னெருக் கார்வன்னி
பொன்றி னார்தலைக் கலனொடு பரிகலம் புலியுரி உடையாடை
கொன்றை பொன்னென மலர்தரு கோட்டூநற் கொழுந்தேயென்
றெழுவாரை
என்று மேத்துவார்க் கிடரிலை கேடிலை ஏதம்வந் தடையாவே.

நெருங்கி வார்ந்த சடைமீது தூய இளம் பிறையும் ஊமத்த மலரும் நல்ல எருக்கத்த மலரும் தளிர்ந்து சிறக்கும் வன்னியும் இவற்றுடன் இறந்தாரின் மண்டை ஓட்டை பிச்சைஏற்றிடும் பாத்திரமாகவும் புலியின் உரியாய தோல் ஆடையும் அணிந்து கொன்றை மரம் பொன் சொரிவது போல மலர்ந்துள்ள திருக்கோட்டூர் என்னும் தலத்துள் வாழும் சுடர்க்கொழுந்தே என்று தொண்டு செய்து போற்றி வாழும் உத்தமர்களை என்றும் போற்றிப் பணிவார்க்கு இடரிலை கேடிலை ஏதம் எதுவும் வந்து சேராது.

நித்தலும் நியமமாக காலை எழுந்து நீராடி நெஞ்சில் கபடம் ஏதும் இன்றி கலங்காத சித்தம் உடையராய் காசு பணம் பெறும் நோக்கமின்றி உலகிற்கு தம்பணியின் திறமை காட்டும் நோக்கம் இலாது இயந்திரமயமான ஒளி ஓசை ஏதும் இலாது காண்டலே கருத்தாகி கடவுட்பணி புரியும் உத்தமர்களையே இங்கு எழுவார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

சிவனுக்கு உண்மையாம்படி அன்புடையார் பற்றி இப்படி பெரிய புராணம் கூறுகிறது. தமக்கு ஏதாகிலும் ஒரு பொறுப்பு உண்டு என்றால் அது சிவனது தொண்டே அன்றி வேறில்லை என்றதாகும். தொண்டில் பணமோ புகழோ இராது. பிறர் மெச்சும்படி நினைந்ததும் அல்லது நினைபபதும் தொண்டாகாது.

அவர்கள் அணியும் மாலை உருத்திராக்கம் மட்டுமே! ஆடை ஒரு நான்கு முழத்துண்டு (கந்தை எனப்படும்) அடுத்து அவர்கள் இரக்கமுடைய நெஞ்சை உடையவர்கள். எந்த ஒரு உயிரும் துயர்பட நினையார்கள். அல்லது பிறஉயிரைத் துயர்ப்படுத்துவாருடன் கூடவும் எத்தனியார்கள். யாதும் ஒன்றும் குறையாகத் தங்களிடம் இல்லாதவர்கள். எல்லாப் பற்றையும் சிறப்பையும் அறுத்தெறியும் மேலான சிவன்பற்று ஒன்றே உடையவர்கள். அவர்களிடம் எந்த விதமான குரோத நய வஞ்சக சுயநலம் இராது.

சுருங்கச் சொன்னால் இன்றைய பிரசங்கிகளாகும் வாரியார் தங்கம்மா மடாதிபதிகள் போன்றிரார்கள். அல்லது இன்றைய காசுக்காகப் பூசை செய்யும் சண்டாளர் போன்றும் இரார்கள்.

உண்மையாம்படி வாரியார் தங்கம்மா மடாதிப்திகள் மொடேர்ண் போன்ற படுபாவிப் பிராமணரை மதித்துக் கும்பிட்ட பழிதான் நமது சமூகத்தை இவ்வளவு அல்லல்படுத்துகின்றது என்பதை தமிழ் சைவமக்களே இனியாதல் உணருங்கள்.

இளம்பிறை சூடிய விரிந்த சடையும் அதன்மீது வன்னி மலரும் ஊமத்தம் பூவும் வெள்எருக்கும் இறந்தாருடைய தலை ஓடான பிச்சைப்பாத்திரமும் புலித்தோலும் இவை எல்லாம் தியானித்து வணங்கி முப்பொழுதும் சலிப்படையாது பூசை புரியும் உத்தமர் எப்படி இருப்பார் எண்ணிப்பாருங்கள். வாரியார் தங்கம்மா மடாதிபதி போல கோலங் கொள்வாரோ எண்ணிப்பாருங்கள். இனியாதல் இந்தக் கபடநாடகப் பேதைகள் பின்செல்லும் வெருளித்தனத்தை நிறுத்துங்கள். தமிழ் மக்கள் உய்தியின் பொருட்டாதல் இந்தப் பேதைக் கூட்டத்தை மதிப்பதைக் கைவிடுங்கள். 6

மாடமாளிகை கோபுரங் கூடங்கள் மணியரங் கணிசாலை
பாடு சூழ்மதிற் பைம்பொன்செய் மண்டபம் பரிசொடு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தேயென் றெழுவார்கள்
கேட தொன்றில ராகிநல் லுலகினிற் கெழுவுவர் புகழாலே.

மாடங்கள் மாளிகைகள் கோபுரங்கள் முத்தினைப்பதித்து நாட்டிய அரங்குகள் அழகிய சாலைகள் இவை இவைகளின் பக்கராக நெருங்கிச் சூழ்ந்தழகாகிய பொன்னின் மண்டபங்கள் திருவருளின் பரிசாக நிலவி இருக்கப் பொருந்தி ஆங்காங்கு கூடிய சோலை சூழ்ந்திருக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்தே என்று எழுவார்கள் கேடு ஒன்றுமே இலாதவராகி இந்த நல்ல உலகினில் புகழாலே சிறந்திருப்பர்.

திருக்கோட்டூர் என்னும் சிவாலயத்தின் சிறப்பு எத்துணை மாண்புடையது என்பதனை அந்த ஊரின் நலச் சிறப்பு எடுத்துக் காட்டுகிறதே! இது தான் தொண்டின் உண்மை நிலை எடுத்துக் காட்டியவாறு. இப்படியான சிறப்புடைய ஊரில் பகை இருக்குமா? சண்டை இருக்குமா? கொடுமை இருக்குமா? கோபம் இருக்குமா? பெண்களின் துர்நடத்தை இருக்குமா? இவைகளைச் சிந்தியுங்கள். மாடங்கள் மாளிகைள் கோபுரம் கூடங்கள் எல்லா மக்களும் அநுபவித்து வாழவழி கண்டது அரசியல் சிறப்பா அல்லது திருவருளின் சிறப்பா? இன்றைய முறையில் பூசைகள் திருவிழாக்கள் இருந்தால் நம் நாட்டில் அப்படி இருந்திருக்குமா?

திருவருளின் பேற்றால் மூன்றாவது வயசில் இருந்து தமிழ் வேதம் ஓதிய சம்பந்தர் மிகைப்பட அல்லது இல்லாதது ஒன்றைக் கற்பனை மூலம் தெரியப்படுத்தி இருப்பாரா?

ஆதலினாலே தமிழ் இனமே நீ வாழ விரும்பின் உண்மையான தொண்டை உணர்ந்து எது சரி என எண்ணிப்பார்? 7

ஒளிகொள் வாளெயிற் றரக்கனவ் வுயர்வரை யெடுத்தலும் உமையஞ்சிச்
சுளிய வூன்றலுஞ் சோர்ந்திட வாளொடு நாளவற் கருள்செய்த
குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற் கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர்கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெறுந் தவமுடையவர் தாமே.

ஒளி கொண்ட வாள் போலும் பற்களை உடைய இராட்சதன் இராவணன் அந்த உயர்ந்த மலையை எடுத்தலும் அதைக் கண்டு உமையம்மை அச்சம் கொண்டு வேதனைப்பட்டுக் கோபிப்ப இராவணன் கொடுமையை அடக்கும்படி திருப்பாதம் ஊன்றலும் இராவணனது சோர்வுகண்டு இரங்கி அவனிற்கு வாளும் முக்கோடி வாழ்நாளும் கொடுத்தருளிய குளிர்ச்சி கொண்ட பூஞ்சோலைகள் சூழ்ந்து நிற்கும் நன்மைதரும் திருக்கோட்டூர் என்னும் தலத்தமர்ந்த நல்ல சுடர்க் கொழுந்தினை உள்ளம் உருகித் தொழுதொழுவார்கள் அவர்கள் நல்ல தளிர் உடைய தாமரை மலர்போலும் திருவடிகளின் அருளினைப் பெறும் தவமுடையராவார்கள்.

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய் போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொண்டின் என்ற மணிவாசகர் கூறுவதை ஒப்ப இராவணனை அவன் கொடுமை நீக்க நெரித்தருளி பின்னர் அருள் கொடுத்தல் கூறப்பட்டது.

அழிப்பின் பின் அருள் நிச்சயம் வரும் என்பதற்கு இது சாட்சியாகும். நாயகனே தண்டித்தால் சயமன்றோ தேவர்கட்கு தாழ்குழலாய் சாழலோ என்பதை உணர்த்தியவாறு.

உமையம்மையார் அருளின் வடிவமாகியவர். இராவணன் இருளின் வடிவமாயவன். அருள் கருணை நிறைந்தது தீங்கிலாதது. எல்லா நன்மைக்கும் காரணமாயது; ஆனால் இருள் கொடுமை உடையது. எல்லாத் தீங்கிற்கும் காரணமாயது. உலகம் அருள இன்றிவாழ முடியாது. ஆனதினாலே இருள் வடிவான இராவணன் அருளின் இருப்பிடத்தை அசைக்க முயற்சித்திட அவனுக்கு தண்டனை கிடைத்தது. தண்டித்தாலும் பின்னர் அவனிடம் அருள் காண்பிக்கப்பட்டது. இருள் தனது அகங்காரத்தை காண்பித்தால் தண்டனை எப்பொழுதும் உண்டு. இவை ஊழி தோறும் ஊழி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனாலே தான் பெரியோர்கள் ஒரு பொல்லாப்பும் இல்லை; அந்த நிலைகள் எல்லாம் எப்பவோ முடிவான செயல்கள்.

ஆனதினாலே உலகில் தீங்கு செய்வார் எப்பொழுதுமே தண்டிக்கப்படாது விடுபடமாட்டார் என்பதை நன்கு நாம் திடமாகக் கொள்ளலாம். 8

பாடி யாடுமெய்ப் பத்தர்கட் கருள்செயும் முத்தினைப் பவளத்தைத்
தேடி மாலயன் காணவொண் ணாஅத் திருவினைத் தெரிவைமார்
கூடிஆடவர் கைதொழு கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
நீடு செல்வத்த ராகிஇவ் வுலகினில் நிகழ்தரு புகழாரே.

பாடியாடுகின்ற உண்மையான பத்தர்கட்கு அருள் செய்கின்ற முத்தாயவனை பவளமாயவனை பிரமனும் திருமாலும் தேடியும் காணமுடியாத அத்திருவுடையவனை பெண்களுடன் ஆண்களும் கூடி கைதொழுது வணங்கும் கோட்டூரில் இருக்கும் நல்ல சுடர்க்கொழுந்தே என் வணங்கி எழுவார்கள் நீடித்த செல்வமுடையவராகி இந்த உலகினில் நிறைவுடைய புகழைப்பெற்றுக் கொள்வார்கள்.

உண்மை நெறிநின்று பாடி ஆடும் பத்தர்கட்கு அருள் செய்தல் தவறாது என்பது கூற்றாகியது. முத்து பவளம் என மொழிந்தமை கிடைத்தற்கரிய செல்வமாகி இருக்கின்றான் சிவன் என்றவாறாகும்.

திருமாலும் பிரமனும் நீண்ட காலமாகத் தேடினாலும் கிடைத்தரியவன் கடவுள். படைப்போரைப் படைக்கும் கடவுளாகியும் படைப்போராலும் காணப்படான் என்பதால் காணாததிருபுடையவன் என்பது கருத்தாக அமைந்தது. 9

கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர்நற் கொழுந்தினைச் செழுந்திரளைப்
பூணல் செய்தடி போற்றுமின் பொய்யிலா மெய்யன்நல் லருளென்றும்
காணலொன் றிலாக் காரமண் தேரர்குண் டாக்கர்சொற் கருதாதே
பேணல் செய்தரனைத்தொழும் அடியவர் பெருமையைப் பெறுவாரே.

கோணிய வெண் பிறையைச் சடைமீது உடையவனை திருக்கோட்டூர் என்னும் தலத்தில் அமர்ந்த நல்ல கொழுந்து போல்பவனைச் செழுமையான முத்தின் திரட்சியாயவனை நித்தலும் உமது சித்தத்திற் பூண்டு எம்பெருமான் திருவடிகளை நீங்கள் போற்றுங்கள். அவன் பொய்மையிலாத மெய்யன். நல்ல அருள்வழி எது என்று காண ஒரு மனம் இலாத கரிய சமணர் புத்தர் வஞ்சனையால் மூடப்பட்டவர் சொல்லிடும் சொல்லைக் கருதிக்கொள்ளாது பூவும் நீரும் கொண்டு நித்தலும் எம்பெருமானைப் பேணுதல் செய்து தொழும் அடியவர் பெருமையை இவ்வுலகில் பெறுவார்கள்.

பூணல் என்பது வேறொரு நினைப்புமின்றிச் சித்தத்தில் சிவனையே பதிய வைத்தல் என்பதாகும். சித்தத்தை சிவன்பால் வைத்து பின்னர் திருவடிகட்கு வேண்டிய பணிவிடையைச் செய்யுங்கள் என்றதாகும். பொய் இலாமெய்யன் என்றது எல்லாம் அழிந்தாலும் சிவன் அழியான் என்றவாறு. பொய் என்பது அழிவுடையது. மெய் என்பது அழிவிலாதது ஆதலினால் அழிவிலாத பொருள் எப்பொழுதும் அருளுடையதாகும் ஆனதினால் நல்ல அருள் என்றும் காணல் ஒன்றிலாக் கார் அமண் தேரர் குண்டாக்கர் சொற்கருதாதே என்கின்றார்.

சமணர் புத்தர் கடவுள் நம்பிக்கை இலாதவர்கள். சமணர் புத்தர் மனிதரையே கடவுளாகக் கொள்பவர். புத்தனும் அருகனும் மனிதராகவே உள்ளவர். ஆனால் சில சீலங்களைக் கடைப்பிடித்து தம்மில் தெய்வீக நிலையை வருவித்தது போன்று ஏதேதோ தத்துவ சாத்திரம் பேசினார்கள். அதனாலே அவர்கள் சொல்லைக் கேட்க வேண்டாம் என்கின்றார் ஞானசம்பந்தர்.

சமணர்கட்கு பூவும் நீரும் கொண்டு போற்றிடும் புண்ணியம் விளங்காது! உண்மைப் பொருளாகும் சிவனது இயல்பு விளங்காது. சிவன் அழிவிலான் என்பதாலேயே முழுவதும் உண்மை என செல்லப்பா சுவாமிகள் கூறினார். இதைத் தொடர்ந்து முழுவதும் உண்மை என்று மேலான முனி சொன்னான் அன்று பழுதிலை என்று சொல்லிப் பண்ணுவாய் சிவதொண்டு என்கின்றார்.

எங்கும் பூரணமாக நிறைந்திருக்கும் அப்பொருளுக்கு ஓர் இடத்தில் ஓர் குறிநட்டு அதனை கடவுளாகப் பாவித்து நல் ஒழுக்கம் தலை நின்று நான்கு வேத முறைப்படி அருச்சித்தால் எல்லையற்ற இன்பவடிவான சோதியைக் காணலாகும். இதுதான் அருள்வழி. இதனையே இப்பாடலில் சிவனைப் பேணல் செய்து போற்றுங்கள் என்றார். இதனைத்தான் சுந்தரர் பெருமானும் பேணல் செய்து அரனைத் தொழும் அடியவர்க்கு அடியேன் என வணங்குகின்றார். இவற்றை மிலேச்சர் விளங்கார்? என் செய்யலாம். 10

பந்து லாவிரற் பவளவாய்த் தேன்மொழிப் பாவை யோடுருவாரும்
கொந்து லாமலர் விரிபொழிற் கோட்டூர் நற்கொழுந்தினைச் செழும்பவளம்
வந்து லாவிய காழியுள் ஞானசம் பந்தன் வாய்ந் துரைசெய்த
சந்து லாந்தமிழ் மாலைகள் வல்லவர் தாங்குவர் புகழாலே.

பந்து உலாவிய விரல் உடையவளும் பவளம் போலும் வாய் உடையவளும் தேன்போலும் மொழி உடையவளும் பாவைபோலும் நன்மை தீமை உணராத கபடமிலாத பூரண அருள்வடிவானவளும் ஆகிய எம் அம்மையுடன் உருவாகி ஒன்றாகி அவளும் தானும் உடனாகும் ஒருவனாய கொத்துக் கொத்தாக மலரும் மலர்கள் சிறந்திட விரிந்து பரந்த திருக்கோட்டூர் என்னும் தலத்தில் அமர்ந்த சுடர்க்கொழுந்தாய சிவனை; செழுமையான பவளம் வந்து உலாவிய சீகாழிப் பதி உள்ளாக அவதரித்த திருஞானசம்பந்தன் வாய்ப்புடையதாக மொழிந்த சந்தம் நிலவிடும் தமிழாகிய பதிகமாகும் மாலைகளை ஓதிட வல்லவர் புகழால் சிறந்து விளங்கிக் கொள்வர்.

எம்பிராட்டியின் நயமே அருளின் சிறப்பே பந்து உலாவிய விரலும் பவள்வாயும் தேனின் மொழியுமாகும். இவை யாவும் தீங்கு செறிவிலாத பூரண நன்மையைச் சுட்டுவதாகும். இதை உணரல் நலம். 11

## மாவிட்டபுரத்தில் அருச்சனைக்கு துண்டெடுங்கோ என ஒலிபெருக்கியில் அலறினார் நான் அருச்சனையும் செய்யாமல் வந்தேன்

இவ்வாறு குப்பிளானைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம் என்னிடம் ஒருநாள் தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் கூறினார் அநேக நாளாக மாவிட்டபுரம் சென்று தரிசிக்கவில்லையே என எண்ணி இம்முறை உற்சவத்தின்போது ஒருநாள் கும்பிடச் சென்றேன். சுவாமி சந்நிதி போய் வலம் வந்து கும்பிடப்போனால் ஒலி பெருக்கியில் ''முக்கிய அறிவித்தல் விசேட அருச்சனைக்கு துண்டெடுங்கோ என்ற விளம்பரமே என் காதைப் பிய்த்தது. உண்மையில் என்னால் கும்பிடக் கூட முடியவில்லை. அந்த எரிச்சலில் நான் அருச்சனை செய்யாது வீடு திரும்பினேன். அவர் காசுப் பயித்தியத்தில் இருக்கிறாரே ஒழிய ஐயோ இது கடவுட் சந்நிதானம் என்பதை மறந்திருக்கிறார்கள்;

நான் சொன்னேன் மாவிட்டபுரம் குருக்களுக்கு விடயம் விளங்காமல் இல்லை. அவர் துர்க்கை அம்மன் கோயிலைப் பார்த்து தன்னில் கொஞ்ச சேற்றைப் பூசிக்கொண்டார். துர்க்கை அம்மன் கோயிலும் எல்லாம் காசு. இங்கும் இனி எல்லாம் காசாகவே முடியும். இது தவறாது!

அங்கு பிரதட்டை செய்வதற்கும் காசு வேண்டினவர்கள் இனி மெல்ல மெல்ல மாவிட்டபுரமும் அப்படி வரலாம் அங்கத்தையிற் சேறு இதையும் இனிச் சேருக்கும்.

உண்மையாக மாவிட்டபுரம் நிர்வாகி திரு. சண்முகநாதக் குருக்களுக்கு ஒலிபெருக்கிப் பாவனை தவறு என்பது விளங்காமலில்லை; இலங்கை நகரில் இன்று வைதிக சைவத்திற்கு ஒரு விளக்குப் போன்றவர். ஆனால் காலச்சுழற்சியில் அவரும் அகப்பட்டுக் கொண்டார். சைவ நீதியின் மேன்மைகள் தெளிவாததற்கு கலியுக உற்பத்திகள் காலக்கொடுமையாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179, கோவில் வீதி
நல்லூர்

# தற்காலத்தில் தவமும் நெறியும் அகன்றுல் அதைத் திரும்பப்பெற வழி காணுங்கள் என்கிருர் ஆசிரியர் ஒருவர்

''இன்றைய சமுதாயச் சீர்கேடுகளுக்கு யார் யார் பொறுப்பாளிகள்?'' என்று வேதனையோடும், பொறுப்புணர்வோடும் சிந்திப்பவர்களும் இந்நிலையை மாற்றியமைக்க வழிவகை தேடுகின்றவர்களும் மனிதரில் மனிதர்கள்.

மனித சமுதாயத்தை, மலிந்துவிட்ட மிருகவியல்பினின்று மீட்டெடுப்பதற்காகத் தமது உடல் பொருள் ஆவி அத்தனையையும் தியாகஞ் செய்து உழைக்கின்றவர்கள் மனிதரிலே தெய்வம் போன்றவர்கள்.

காலத்தின் இன்றைய கோலத்தை உணராமல் அதன் சுழியில் அகப்பட்டு, அதையே வாழ்வின் பெரும்பேறென்று நினைந்து உழல்வார் யாவரும் உண்மையிலேயே மிருகங்களிலும் கேவலமானவர்கள். மிருகங்களின் வாழ்வு முறைகளிலும் சில ஒழுங்கு முறைகள் உள்ளன. இக்காரணத்தால் இவர்கள் மிருகங்களை விடக் கேவலமானவர்களாகின்றனர். இத்தகையோர் தம் வயிற்றுக்கும் பஞ்சப்புலன்களுக்கும் விருந்தளித்து வாழ்வதையே இலட்சியமாகக் கொண்டுள்ளார்கள். வேறெந்த நோக்கங்களோ அன்றி விதிமுறைகளோ அவர்களுக்குக் கிடையாது.

மனச்சாட்சியையும் பொறுப்புணர்ச்சியையும் புறக்கணித்துவிட்டால் அப்புறம் மனித வாழ்வுக்கு வரைவிலக்கணம் தான் ஏது?

வாழ்ந்து காட்டி, வழிநடத்தக் கடமைப்பாடுடைய பெற்றோர்கள், தம்மனம் போன போக்கிலே தாமும் வாழவேண்டுமென்னும் காரணத்தால், தம் கடமைப்பாட்டைப் பொறுப்பேற்கத் தவறிவிட்டனர். ஏதோ பெற்றதோடும், வளர்த்ததோடும் நின்று விடுகின்றனர்.

இப்படியான பெற்றோரினுல் வழி நடத்தப்பட்ட பிள்ளைகளை, மாணவராக ஏற்று அவர்களின் எதிர்கால வாழ்வை உருவாக்க முடியாத காரணத்தால் ஏதோ கூலிக்கு மாரடிப்பவர்களாக ஆசிரியர்கள் மாறிவிட்டனர்.

உலகிலே தோன்றிய மதங்கள் அத்தனையும் அந்தந்த இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மக்களை வழிநடாத்தத் உருவானவைகளே. அவைகளும் அப்பணியை உரிய முறையில் செய்யத் தவறி விடுகின்றன. அவைகள் வெறும் வியாபார நோக்கிலும் இயங்கி வருகின்றன. இதனுல் அவைகள் மக்கள் சமுதாயத்தின் நம்பிக்கையையும், மதிப்பையும் இழந்து பழிப்புக்கு இடமாகிவிட்டன. இக்காரணத்தால் மதங்களாலும் மக்களை வழிநடத்த முடியவில்லை.

உண்மை வழிநின்று சமுதாய நலன்தேடி உழைக்கும் பெரியவர்களும் சமுதாயச் சீரழிவுகளால் மனம் நொந்து பின்வாங்கி விட்டார்கள்.

மதிப்புக்குரியவையும், பண்பாட்டை வளர்க்க உதவக்கூடியவையுமான தெய்வீகக் கலைகள் பாமரமக்கள் இரசனையை எதிர்பார்த்துக் கீழே வந்து நிற்கின்றன.

இக்காரணங்களால், மலிவான புகழையும் இலகுவான வாழ்வுச் சுகத்தையும் பெற்றுவிடவே மக்கள் துணிந்து நிற்கிருர்கள். இந்த நிலையில் பொய்யும் களவும் போட்டி பொருமைகளும் தெய்வ நிந்தனையும் பெரியோரை அவமதித்தலும் வளர்ந்து விட்டன. மக்கள் நீதி நியாயங்களுக்கு அஞ்சுதலும் பழிபாவச் செயல்களுக்கு நாணுதலும் நீங்கி விட்டன.

திருடிச் சுகங்கண்டவன் தன் மகனைத் திருடனுக்கவும் வியபிசாரியும் தன் மகளை அவ்வழி வாழவைக்கவும் துணிந்துவிட்ட காலமிது.

உண்மையானதும் நேர்மையானதுமான உழைப்பினுல் கிடைக்குந் தேட்டமே பேரின்பந்தருந் தேட்டமென்ற இரசனை உணர்வு மக்கள் மனதைவிட்டு மறைந்து வருகின்ற ஒரு சூழ்நிலையையே இன்று காண்கின்ருேம். இந்த நிலை தொற்று நோய்கள் போலத் தொடர்ந்தே வருகின்றது.

இவ் அவலங்களை நீக்க யார் முன் வருவார்? இதற்கு வழி சொல்லுங்கள்! பேச்சாலும் செயலாலும் தூய்மைபேணும் சமுதாயம் இனி வருமா?

# நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கிராமசேவையாளர் நல்லூர் பெருமான் உற்சவ காலத்தில் புரிந்தபணி முன்னைய காலத்தைப் போன்று சைவமறுமலர்ச்சிக்கு வழி காணும் ஒன்று

இம்முறை நல்லூர் உற்சவத்தில் பொலிஸ் பாதுகாப்பு இல்லாது இருப்பவும் யாழ்ப்பாணம் நல்லூர் கோப்பாய் பகுதிக் கிராமசேவையாளர்கள் பாதுகாப்பு நடைவடிக்கைகளில் ஈடுபட்டு சிறந்த அமைதியை அங்கு நிலை நாட்டியமை கண்டு சந்திரதீபம் தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

முன்னைய காலங்களில் எல்லாம் ஒவ்வொரு கோவிலிலும் பாதுகாவல் படையினர் தொண்டு புரிந்தனர். இதை திருவாதவூரடிகள் புராண மூலம் காணலாகும். எதுவித வேதனமோ பிரதி உபகாரமோ பெருமல் இவர்கள் தொண்டு புரிந்தனர்.

சாத்வீக முறையில் கோவிலில் அல்லன செய்வாரை அவ்விடத்தால் அகற்றுவதற்கும் குற்றம் புரிவாரை அவ்விடத்தால் அகற்றி மக்கள் ஆண் பெண் இருசாராரும் ஏதும் ஒரு சிரமம் இலாது வழிபட இந்த படையினர் உதவினர் என்பது வரலாறு.

இந்த முறையில் அவர்களை ஆகம்படியார் என்று அவர்களை அறிந்து கொள்ள தனித்த விசேட உடைகள் சைவநெறிக்கு ஏற்ப கொடுபட்டிருந்தன.

இதே போன்று இம்முறை பணி செய்வாரை அறிமுகம் செய்ய விசேடித்த உடைகள் கொடுபட்டிருந்தால் பாதுகாப்புகள் இன்னமும் சிறப்பெய்தி இருக்கும்.

அருச்சனைக்கு ரிக்கற் வழங்கும் விடயத்தில் ரிக்கற் வழங்குபவர்கள் நன்முறைகளை கடைப்பிடியாததால் தொண்டர்படையும் ரிக்கற் எடுக்க வந்த மக்களும் துயரப்பட்டுக் கொண்ட சம்பவங்கள் தேரிலன்று நடைபெற்றுக் கொண்டனவாம். இந்த நிலையில் கள்ளர்களின் கைவரிசைகள் மேலோங்கிட வந்துள்ளதாம்.

ரிக்கற் எடுக்கும் சனநெரிசலில் பல பெண்கள் தங்கள் நகைகளை இழந்ததாகக் கூறப்படுகின்றது. நிர்வாகம் இப்படியான நிலையில் ரிக்கற் கொடுக்கும் இடத்தை தனித்த இடமாக இல்லாமல் பல்முகப்படுத்தி இருந்தால் இப்பரிதாப சம்பவங்கள் நிகழ்ந்திராது. இதனுல் மக்கட்கும் வசதியாய் இருக்கும் களவுகளும் ஏற்பட்டிருக்காது என ஒரு கிராமசேவகர் நம்மிடம் கருத்துத்தெரிவித்தார்.

ஆதலினுலே அடுத்த ஆண்டில் அறிமுக உடையும் ரிக்கற் வழங்கும் பல்முக வசதிகளையும் ஏற்படுத்தி நல்லூர் நிர்வாகம் சைவநன்நெறியின் உயர்வை பாதுகாக்கும் என நம்புகிருேம்.

# சொல்லால் வரும் குற்றம் எல்லாம் நல்லோர் பொறுத்திடுவர் என்கிருர் யோக சுவாமிகள். முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பது முருகனது கொள்கை என்கிருர் அருணகிரியார்

நம்மீது யார் ஒருவர் வசை கூறினுலும் அவர்பால் பிரதியாக கோபமோ கொடுமையோ செய்ய எண்ணுதல் உண்மை தெளிந்த ஞானிகள் எவரது உள்ளத்திலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எமது சைவ நெறியில் உயர்ந்த கொள்கை நமக்கு இன்னுமை செய்தாரையும் ஏற்று இன்னுமை செய்தார் ஏன் செய்தார் என்பதை அறிந்து அதற்கு ஏற்ற வகை நம்மைத் திருத்தியமைத்தலேயாகும். அதற்காக பிழை செய்வார் செய்யும் செயலை ஏற்க வேண்டும். அவர்வழி நாம் இணங்கி வாழவேண்டும் என்பதல்ல.

ஒருவர் நமதிடத்து உள்ள குறைகளை உணர்ந்து கடும்வார்த்தைகளால் எனினும் நம்மை நோகும்படி ஏசிவிட்டால் அந்த சொல்லினுல் எழுந்த எமது மனத்தாக்கத்தை தவிர்த்து பிழையை உணர்ந்து நாம் திருந்தி நடப்போமேயானுல் அன்றுதான் நாம் தெய்வீக நிலையில் அடி எடுத்து வைக்கின்ருேம்.

எல்லாம் அவன் செயல்! எப்பமோ முடிவான காரியங்கள் எமக்கொருதேவையுமில்லை. இன்றென நாளை என எண்ணுதற்கிடமில்லை. அன்று செய்வினையினுலே இப்பூமியில் பிறந்து இன்பம்போல் வரும் துயரத்திற்கு வித்தான சிறிய இன்பநிலைகளிலே பட்டம் பதவி உயர்வு தாழ்வு நான் நீ என்ற கோட்பாட்டில் மனம் சுழன்றடிக்க விடாதபடி மனதை பெரியோர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தம் மனதை மெல்ல முயல்வார்கள். இது எந்த சமயத்து பெரியோர்களை எடுத்து நோக்கினுலும் காணப்படும்.

பூசை புரிதல் வேதம் ஓதல் சாத்திரம் கற்றல் வேதாந்தம் கற்றல் எல்லாம் எங்கு போய் முடியும் எல்லையாகியது என்ருல் நன்மையும் தீமை யாவும் உணரமுடியாத பூரண சாந்தி நிலைக்கே நம்மைச் சேர்க்கின்றன.

ஆனதினுலே பூரண சாந்தி நிலையைத் தனக்குள் பெறமுயல்பவன் எவன் ஒருவனும் பிறரின் தூற்றலையோ அல்லது அவமதிப்பையோ பொருட்படுத்தான். தன்னுல் தன் இனத்தால் தன் பகைவரால் தன் குடும்பத்தால் தன்னை இகழ்ந்தாரை துயருறுத்த ஏதும் செய்ய மாட்டான். அல்லது எங்களுக்கு இப்படி நடந்துவிட்டது எங்களை அவமதித்து விட்டார்கள். நாம் அவரை ஒரு கை பார்க்க வேண்டும் திரண்டு வாருங்கள் இகழ்ந்தாரை முடிவுகட்ட வேண்டும் என எண்ணமாட்டான்.

எனவே தான் சொல்லால் வரும் குற்றம் எல்லாம் நல்லோர் பொறுத்திடுவர் என யோகப் பெருமான் அருள் செய்திருக்கிருர். பிறர் சொல்லிடும் சொல்லால் வரும் குற்றத்தை நல்ல உள்ளங்கள் நிச்சயம் பொறுக்கும்.

இந்த உண்மையை உணர்ந்து யேசுநாதரும் அடிக்கடி பிறரது பிழைகளை மறந்துவிடு பிறர் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் கொடு என்ருர். அவரது போதனைகளைப் பின்பற்றும் கிறீஸ்தவர்கள் என்ன சொல்கிருர்கள்? என்ன செய்கிருர்கள்? அவர்களது போதனைகளை எத்தனை கட்சியாக நின்று பேதித்து பெரும் தவறுகளை மீளமீள உருவாக்குகிருர்கள். கத்தோலிக்கர் பாதிரி வேதம் பெந்திக்கோஸ் கிறிஸ்தவர்கள் இவர்களின் நடத்தைகள் என்ன?

அடுத்து புத்தம் சமணம் இஸ்லாம் முதல் புல்லறிவுடைய சமயங்களைப் பின்பற்றும் மக்கள் என்ன மாதிரியாக நம் நாட்டில் நடந்து கொள்ளுகிருர்கள்? இவர்களது நடத்தையின செயலால் இலங்கை நகரிலே எத்தனை கொலை கற்பழிப்பு பழிபாதகம் குழந்தைகளைக் கூடக் கொலை செய்தல் யாவுமே நடைபெற்றன! இது நடக்கவில்லையா? அப்பொழுது இப்படியான ஒரு மிருக வெறி பிடித்த சமயங்கள் வாயால் ஒன்று சொல்லி நெஞ்சில் இன்னென்று நினைந்து அந்த வஞ்சனையும் கொலையும் புலையும் நிறைந்த சமயங்களை எந்த ஒரு அறிவாழியாதல் தனக்கு உறுதி பயக்கும் ஒரு சமயமாகக் கொள்வானு?

எல்லாம் சிவமயமாகக் கொண்ட சம்பந்தட பெருமான் ஏன் சமணர் புத்தர் போன்ற புறச்சமயங்களைச் சுட்டிக்காட்டி இவைகளது போதனைகள் உங்கட்கு வேண்டாம் எனக் கூறினுர்? இதைச் சற்றே நினைவில் கொண்டால் புத்தர் சமணர் வழி போதனையிச் ஏதோ அபாண்டமான பொய்மை கலந்துளது; என்பது நன்கு புலப்படும். சமணரிலும் புத்தரிலும் சோனகரிலும் கிறிஸ்தவரிலும் கடவுள் இல்லாமல் இல்லை என அவர் கூறிடவில்லை. அவர் உலகிற்கு வேண்டாதவர் எனக் கூறிடவில்லை. அவர் வழியில் அவர் சமயத்தால் தூண்டி விடப்பட்ட பழுதான வழிகள் அவர்களில் எத்துணைப் பெரியவராக ஒரு தூய்மை உடையவராக இருந்தாலும் அவர் உய்ந்திட மாட்டார் எனபது மிகு தெளிவாக உணர்ந்தபடியால் சைவ மக்களை நோக்கி நீங்கள் அவர் வழி போக வேண்டாம். அவர் சொல்லைக் கேட்க வேண்டாம். அவரோடு கூடி நட்புரிமை கொண்டாடுதலைக் கூடவைத்துக் கொள்ளவேண்டாம் என்று திடமாகத் தாம் பாடிய ஒவ்வொரு பதிகத்திலும் நன்கு உறுதி படப்பேசி உள்ளார். அவர் வழிகளில் சில நன்மைகளேனும் காணப்பட்டாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையும்தான் உங்கட்கு வேண்டாம் என மொழிகின்றார்.

திருவான ஒழுக்கத்தில் தலைநின்ற திருநாவுக்கரசர் சமணரிடம் தருமசேனர் என்ற உயர்ந்த பட்டம்பெற்று வாழ்ந்த காலத்தில் திருநாவுக்கரசரின் நன்மைக் குணங்களையாதல் உத்தேசித்து திருநாவுக்கரசர் நோய் வாய்ப்படாமல் சைவ நெறிக்கு மாற்றப்பட்டிருக்கலாம். ஆனால் சமண சமயத்து நின்றபழியால் அப்பழி நீங்க சூலைநோய் கொடுத்து ஒரு பாவமும் அறியாத திருநாவுக்கரசரை அநுபவிக்கப்பண்ணி பின்னர் வருத்த மூலம் வரங்கொடுத்து உய்ந்து கரையேறுமாறு அருளப்பட்டது. இதனை பின்னர் உணர்ந்த திருநாவுக்கரசர் தவமென்று பாயுடுத்து மயிர்பிடுங்கி நின்றுண்டு அவம் செய்து அலமந்தேன் என பல பல நிலையாலும் சமணரின் நிலையால் எழும் பாவங்களை நன்கு விளக்கி உள்ளார்.

இதே போலத்தான் புத்தநெறியில் நின்ற சாக்கிய நாயனார்க்கும் பல துயரப்பாட்டினை வருவித்து அல்லல் படுத்திய பின்தான் மலரிட்டு வழிபடும் சிறப்பினை உணர்த்த வேண்டி உண்ணும் முன் மலர் பறித்திட்டு உண்பதன் சிறப்பைக் காட்ட சிவலிங்கம் கண்டபோது கல் ஒன்று எடுத்து எறியச் செய்வித்த கருணையாகும். கல்லால் எடுத்து எறியத் தொடங்கிய அன்றே சைவம் சாக்கிய நாயனாரிடம் குடிபுகுந்தது.

அவரே அன்று தமது வாயால் ''செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனுங் கொடுப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லை என உய்வகையாற் பொருள் சிவன் என்று அருள்வகையால் உணர்ந்தறிந்தார்''

இந்த பாடலை நன்கு நீவிர் நோக்கினால் சைவம் என்பது ஏதோ கிறிஸ்தவம் புத்தம் சமணம் இஸ்லாம் முதலிய சமயங்களைப் போன்று பேதைத்தனமான கொள்கைமூலம் கடவுட் தன்மைகளைப் பேணிடவில்லை.

சைவம் உண்மை ஒன்றைத்தலையாகக் கொண்டு அந்த உண்மையில் ஏதும் அப்பழுக்கற்ற செயலை நான்காக வைத்து செய்வினை செய்வான் செயலின் பயன் பயனைக் கொடுப்பான் என்னும் நான்காலும் அந்த உண்மையை விளங்கிடத் துலங்கிட வைக்கிறது.

பிறந்த உயிர்கட்கெல்லாம் மரணம் நிச்சயம் அதை விலக்கிடயாருக்கும் முடியாது.. இதிலே சைவம் மட்டும் துணிந்து உணர்ந்து தெளிந்து சொல்கின்றது இந்த மரணத்தை வென்றிட பூ நீர் இரண்டின் தொடர்பாய செயல் அன்றிவேறில்லை. இந்தச் செயல் புண்ணியமாகும். பூ நீர் இரண்டிற்கும் பணம் என்பது தேவையில்லை. பாடுபட்டுத் தேடிக்கொள்ளலாம். யாரையும் கெஞ்சத்தேவையில்லை. இரக்கத்தேவையில்லை. பூவும் நீரும் எங்கும் காணப்படும் பொருள். பூ இல்லாத நேரம் ஓர் பச்சிலையாதல் போதுமானது. இதுவே வழிபாடு. இந்தப் பூவுடன் நீருடன் வழிபடும் போது இன்னும் சில ஒழுக்கங்கள் வேண்டப்படுவன. இவைக்கு பணம் தேவையில்லை. அல்லது பிறர் உதவி தேவையில்லை. அவையாவன:

1. அகிம்சை அதாவது பிற உயிர் எந்த வகையாலும் துயரப்படாத வழிவாழ முற்படுதல் 2. சத்தியம் எவருடனுதல் உண்மை பேசுதல் வஞ்சனை செய்யாமை 3. புலன் அடக்கம் சினிமா வானொலிக் கீதம் சுவையான உணவு படுக்கையில் வசதி இவை போன்ற நிலையில்வரும் இன்ப நிலைகளைக் கட்டுப்படுத்தல் 4. தயவு பிற உயிர் துன்பப்படும்போது நமக்கென்ன அவன் கெட்டுப்போகட்டன் என எண்ணாதே தனக்கு இயன்ற அளவு உதவி புரிதல் 5. சாந்தம் பிறர் எவ்வளவு துயர் புரிந்தாலும் அல்லது வசைபாடினாலும் அதனால் மனம் குழம்பி வேதனைப்பட்டு அலம்பித்தள்ளாதிருத்தல். ஒலிபெருக்கி முதல் இயந்திரசாதனங்கள் மூலம் பேசாதிருத்தல், உரக்கக்கத்தாதிருத்தல் 6. ஞானம் பல நூல்களையும் கற்று தெளிந்து உலகின் நிலையாமை உணர்ந்து நித்தியமான வாழ்வைப் பற்றி எண்ணிக்கொள்ளல். அதற்குரிய சிந்தை வழி எண்ணி பற்றுக்களை நீக்கல் 7. தவம் காலையில் எழுதல் பூவொடு நீரும் சுமந்து பூசைபுரிந்து போற்றி செய்தல், ஆடம்பரமான கோலங்களை விரும்பாதிருத்தல் 8. பாவனை தன்னை உடம்பாகக் கருதாது? தன்னைச் சிவனாகக் கடவுளாகப் பாவித்தல். எவ்வாறு கடவுள் எங்கும் உள்ளாரோ அவ்வாறே தன்னை தானும் எங்கும் உள்ளவராகப் பாவித்தல். சூரியன் சந்திரன் மண் நீர் நெருப்பு காற்று ஆகாயம் ஆன்மாயாவும் ஒன்றாயிருக்கும் பூரணத்து ஒடுங்குதல்.

பூவும் நீரும் கொண்டு பூசை செய்வார்க்கு இத்தகைய எண்வகைச் சீலங்களும் வேண்டும். இந்த நிலை உண்மையாம்படி சைவநெறி ஒன்றிற்கே உரித்தாயது அன்றி வேறு எந்த சமயத்திற்கு உண்டு? இல்லவேயில்லை!

இஸ்லாம் சொல்லுமா? கிறிஸ்தவம் சொல்லுமா? புத்தம் சொல்லுமா? இலங்கையில் உள்ள இந்த மூன்று சமயங்களில் எந்த சமயங்கள் இதைச் சொல்லும்? அல்லது தெரியும்!

ஆதலாலே தான் எம்பத்திரிகையில் ஐயோ இந்த உயர்வின் உச்சியில் நின்று விளங்கும் சமயத்தை கீழ் இறக்கி உனது சீவியத்திற்காக எமது உயர்ந்த நெறிகளைப் பாழாக்கி விட்டாய். இனியாதல் திருந்து என இனிக்கச் சொன்னேன். அதைப்படுத்தாதுகாசுவிருண்டிடசெய்யாதனசெய்யும் உங்கள் அலங்கோலங்களை பிராமணரே பிரசாரகரே செய்தீர்கள்.

தருமத்தை மதிக்கவில்லை. உயர்வை எண்ணவில்லை. காசின் மூலம்கள் காமம் புலால் உண்ணல் முதல் பல பழுதுகளை இரகசியமாகச் செய்தீர்கள். அவற்றை வெளிப்படுத்தி இப்படி நடக்கிறது எனக் காட்டினேன். அதையும் நீங்கள் அறிந்தும் திருந்தவில்லை. எங்கள் சமயத்தை பிராமணரும் பிரசாரகரும் குடிகாற மணியகாரருமாகக் கெடுத்து விட்டீர்கள்.

உங்கள் உள்ளம் யாவும் கெட்டன என்பது வெளிப்படையாகியது! இனி உங்களை நாம் மதிக்க மாட்டோம்.

உலகில் தமிழினம் மேன்மை உற்று வாழவேண்டின் கோயில்கள் ஒழுங்காக நீதிவழுவாத நெறிமுறையில் நடைபெற வேண்டும் என்பது உண்மை.

ஆனதினால் இவ்வளவு கண்டனம் நாம் தெரிவித்த பின்னும் என்னை ஆதரித்து சைவநெறிவளர வேண்டும் உண்மை துலங்க வேண்டும் பொய் அகல வேண்டும் என்று பல நல்ல உள்ளமுடைய பிராமணர்கள் என்னை இன்றும் ஆசீர்வதிக்கின்றனர்.

மடாதிபதிகளே தயவு செய்து நீங்கள் சைவநெறியில் சமணரிலும் கொடிய வஞ்சகர். உங்கள் பொய்யும் புகழும் புரட்டும் பலபல பழுதுகளைப் பெருக்கி உண்மையான சைவத்தை வேரோடு அழித்துவிட்டது.

இன்று உங்களை நல்ல உள்ளங்கள் வெறுக்கத்தொடங்கி விட்டன. தற்பெருமையையும் புகழையும் விரும்பும் பிறர்க்கு ஈயாத சவுக்காரம் சர்வத்து சினிமா பீடிசங்கங்களில்களவெடுக்கும் வெள்ளைவேட்டிக்கள்ளர்களான பணக்காரக்கூட்டத்தையும் வைத்துக்கொண்டு ஒலிபெருக்கியும் வைத்துக்கொண்டு கோலாகலமாக நீங்கள் கொண்டாடுவீர்கள் இன்னும் சில நாட்களுக்குமட்டுமே! இனிமுடியாது!

இதே வேளை சைவநெறி உணர்ந்த உத்தமராகிய இளைஞர் சமுதாயமே! இலங்கை எங்கள் நாடு. இதில் நாம் வாழ வேண்டும். சண்டாளப் பிராமணனையும் பிரசாரப் பேதைகளையும் பொய்யரான கோவில் முதலாளிமாரையும் நம்பிமோசம் போனோம். இனிமேல் இந்தப் பாதகர் எவரையும் நம்பவேண்டாம். இவர் கையில் ஏதும் கொடுக்கவேண்டாம் இவர்க்கு ஏதாவது ஒரு ஆதரவு காட்டவேண்டாம் அப்படிச் செய்வதால் உங்கள் தமிழ் இனத்திற்கு நீங்கள் துரோகம் செய்தவராவீர்.

துட்டரை ஆதரித்தால் துட்டத்தனமே நாட்டில் பெருகி உங்களை முடிவில் அழித்தொழிக்கும் என்ற பெரியோர் வாக்கியத்தை நம்புங்கள்.

தமிழ் இனம் வாழவிரும்பின் நீங்கள் யாவரும் அகிம்சை சத்தியம் தயவு சாந்தம் புலன் அடக்கம் தவம் ஞானம் பாவனை என்னும் எட்டு வகைச் சீலங்களையும் அநுட்டித்தால் எமது பகைவர் தாமாக அழிந்தொழிந்து போவார்கள். தமிழினம் என்றும் இலங்கை நகரில் வாழும். சீராகவும் சிறப்பாகவும் ஓங்கி தமிழர் வாழ்வார். இவைமுழுவதும்உண்மை.

## கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலில் அருவருக்கத்தக்க சீர்கேடுகள் டெலிவிசன் சினிமாக் கதையுடன் பூசைமுதல் பெருங்குள்றுபடிகள்

தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவில் ஐயர் முன்பொருநாள் ''சுருங்கனி மீன் பாட்டு'' பாடி வீதியால் சென்று கொண்டிருந்ததைக் குறிப்பிட்டும் அடுத்த பத்திரகாளி கோயிலில் கொடியேற்றம் நடைபெறும் போது ஐம்பதிலும் ஆசை வரும் எனப்பாடி ஆசையின் உச்சியில் ஐயர்மார் கொடியேற்றிக்கொண்டாடிய வரலாறு குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால் நாம் குறிப்பிட்டது இரவும் பகலும் வித்தியாசம் காணாது பானம் பருகும் ஐயர்மாருக்கு காதூடு ஏறி உள்ளத்தில் நல்ல உணர்வை ஏற்படுத்தவில்லை.

நாம் ஒரு கோவிலிற்கு தொண்டு புரிவோம், எவ்வளவு தூய்மையாக நாம் நடக்க முயலவேண்டும் என நினைக்க அவரது வயிறும் நெஞ்சும் மனமும் இடங்கொடுக்கவில்லை.

இந்த இரண்டு குறிப்பிட்ட கோவிலில் ஐயர்மாரும் கோயிலை தங்கள் காய்கறிக் கொட்டில் போல் நினைக்கிறார்கள்.

தாவடி முருகமூர்த்தி கோவிலில் ஐயர் தெருவில் நாய் மலம் முதல் அழுக்குகள் பிரண்ட சயிக்கிளை வெளியில் நிற்பாட்டாது நேரே மடப்பள்ளிக்குள் கொண்டு போவாராம். அப்படியான அவர் மடப்பள்ளியில் சுவாமிக்கு எப்படி திருவமுது தூய்மையாக வைப்பாரோ தெரியாதாம். சில இளைஞர்கள் இவரின் கொடுமை கண்டு சயிக்கிலுக்கு குண்டூசியால் குத்தியும் ஐயா திருந்தவில்லையாம்.

இக்கோவிலில் பூங்காவனம் என்ற மிகக்கேவலமான உற்சவம் நடக்கும். இதனை சுருட்டுத்தொழிலில் ஈடுபட்ட துர்நடத்தை உடைய சில இளைஞர்கள் நடத்துவாராம். பூங்காவனத்திற்கு மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் ஆண்களைத் தேடிப்போகும் கன்னிப்பெண்கள் போல தாவடியிலும் உண்டாம், இந்த சுருட்டுத் தொழில் இளைஞருக்கும் அந்தக் கன்னிப் பெண்களும் பூங்காவனத்திலன்று கிள்ளி நுள்ளி விளையாடி விலுப்பாட்டும்பாடி தங்கள் கண்ணடிப்பு சிரிப்பு முதல் பல பழுதும் பலர் காண நாணமின்றிச் செய்வாராம்.

இந்த அவலநிலைகண்ட அவ்வூரைச் சேர்ந்த பல பெரியோர் ஓடிச்சென்று லயிற்றை நிற்பாட்டினார்களாம். அதனாலே பெரியவர்க்கும் சுருட்டுக்கார சாவாலிகட்கும் கலம்பகம் ஏற்பட்டதாம். அந்த கோயிலின் காமச் சீர்கேட்டை நேரில் கண்ட பலர் சந்திரதீப வளாகத்தில் வந்து இச்செய்தியைத் கவலையுடன் தெரிவித்தனர்.

## ஒலிபெருக்கி தகராறில் ஐயரின் பூநூலும் அறுத்து அடியும் விழுந்தது

அங்கணாக்கடவை கண்ணகை அம்மன் கோவில் என ஒன்று சண்டிருப்பாய் மாகியப்பிட்டியில் இருக்கிறது. அக்கோவிலின் நிர்வாகம்தற்பொழுது அந்தணர் கையில் உள்ளது. அக்கோவில் பழுதுகள் பலவுடனும் கோயிற்குரியதாக உள்ள பொருள்கள் பழுதடைந்து காணமல் போய் விட்டபடியாலும் அக்கோயிலை சீரமைக்க வேண்டுமென சிலர் முன் வந்தனராம். இதற்காக தங்கம்மாவின் பிரசங்கமும் நடைபெற்றதாம். கோயில் சீர்கெட்டாலும் இரண்டு ஒலிபெருக்கி பிடித்து இம்முறை உற்சவம் நடத்தினார்களாம் ஊர்மக்கள். ஆனால் ஒலிபெருக்கி பாவித்தபின் ஒலிபெருக்கியின் பொருளை கோயிலில் ஐயர் மடப்பள்ளியில் வைத்தார்களாம். இப்படி இருமடப்பள்ளியில் வைத்த ஒலிபெருக்கி யூனிற் 1000 ரூபா பெறுமதியானது காணமல் போனதாம். அதனாலே அக்களவில் ஐயரையும் சந்தேகித்து விதானை வந்து விசாரித்ததாம். அந்த நிலையில் ஒலிபெருக்கியில் பெறுமதியில் 3குப் பிரித்து கோயில் ஐயரில் 1 பங்கு திருவிழாக் காரரில் ஒருபங்கு ஒலிபெருக்கிகாரனில் ஒருபங்கு கட்டும்படி தீர்த்தனராம். ஐயர் அதற்கு மறுத்து நான் ஏன் கொடுப்பான் என்ற தகராற்றில் ஐயரின் பூநூல் அறுபட்டதாம். ஐயருக்காகப் பேசிய இன்னொரு ஐயருக்கு மண்டையில் காயம் ஏற்பட அடியாம். கொடி ஏற்றிய குருக்களையும் இழுத்து ஏதோ தவறு நடத்தினராம். எப்படி இருக்கு நிலை. கோயில நிலை என்ன? ஒலிபெருக்கி வந்து பெருக்கிய பழுது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் காட்டிய நெறியே சைவம் 3

## இறைவனின் ஏகத்துவமும் மனுக்குலத்தின் ஒருமைப்பாடும் நீக்கி மக்களிடையே துவேஷத்தை வளர்ப்போர், அழிவையும் மரணத்தையும் அறுவடை செய்வர், சைவர்களே!

## இவர் வழிச் செல்லாதீர்!

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லை நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே
— திருமூலர்

ஒன்றென்றிரு! தெய்வமுண்டென்றிரு! உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு! பசித்தோர் முகம் பார்! நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே.
— பட்டினத்தடிகள்

யாவரும் பெறஉறும் ஈசன் காண்க
தன்னேரில்லோன் தானே காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க,
— திருவாசகம்

இறைவன் ஒருவனே, எல்லையற்ற ஞானமும், கருணையும் அருளும் உடைய அக்கருணாகரனையன்றி வணங்கத்தக்க பொருள் வேறில்லை. இதையே நால்வர் செந்நெறி காட்டுகின்றது. பெருமானார் (ஸல்) அவர் மூலமாக இறைவனருளிய திருக்குர்ஆனும் இதனையே வலியுறுத்துகின்றது. மிக்க அருளாளனாகிய இறைவனின் ஏக ஆதிபத்தியத்தை ஏற்கின்றவன் பூரண சுதந்திரவான் ஆகின்றான். இவ்வாறு இறைவன் ஏகனாக அவன் பெருங்கருணைக்கு இலக்காகிய மனிதர் எல்லாம் தம்மிற் பேதமற்ற ஒரே குலமாகிய இறைவனின் அடியாராகின்றனர். இதனையே யோகர் பெருமானும் அடிக்கடி கூறி வந்தார். பாஷை, நிறம், பழக்க வழக்கங்கள் மனித சமூகத்தை வேறுபடுத்தினாலும், இறை சந்நிதானத்தில் இவற்றால் எவ்வித பேதமுமில்லை.

இதனையே எம்பிரான் சம்பந்தர் ''எல்லா மொழியாலும் இறைவா என ஏத்த நல்லான் நமை ஆள்வான் நல்ல நகரானே'' என அருளியிருக்கின்றார், ''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'' என அப்பர் பெருமானும், ''சாதி சமயம் கடந்த பொருள்'' என அப்பன் அருணகிரியாரும் அருளியுள்ளார்கள். இறைவன் கருணைக்குப் புறம்பாக எவ்வுயிரும் இல்லை. ஆகவே எல்லா உயிரின் நலத்திற்காகவும் உழைத்தல் உயரிய செந்நெறி எனச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்து வலியுறுத்தியுள்ளார்.

இவற்றை ஏற்காதவன் சைவனாகான். இன்றோ தம்மைச் சைவர் என்று கூறுபவர் இறைவனின் இடத்தில் மொழி வெறியையும், சாதி வெறியையும் வணங்கத்தக்க பொருளாக வைத்து வணங்குகின்றார். இதனால் இவர்கள் குரோதமும், ஆங்காரமும் வஞ்சனையும் நிறைந்தோராக சீரழிந்து போகின்றனர். மொழி அறிவு விருத்துக்கும் கருத்து பரிமாறலுக்குமுரிய ஒரு கருவியே அன்றி வேறல்ல. உண்மையில் மொழி வாழ வேண்டுமாயின் விஞ்ஞானம், கணிதம், தொழில் நுட்பம், இலக்கியமாகிய துறைகளில் நல்ல நூல்கள் அம்மொழியில்வர முயற்சிக்க வேண்டும்; தம்முடைய நல்ல நயத்தக்க நாகரிகமான ஒத்து வாழும் தன்மையாலும் அன்பாலும் நீதியுடைமையாலும் நம் கலாச்சாரத்தின் உயர்வைக் காட்டலாமே ஒழிய துவேஷத்தை வளர்ப்பதால் நாம் உயர்வடையப்போவதில்லை.

இன்று சைவர்கள் உள்ள பொதுக் கூட்டங்களில் தேவாரத்திற்குப் பதில், குரோதமும் சகிப்புணர்சியுமற்ற கருத்து வளனில்லாத மொழி வணக்கம் பாடப்படுகின்றது. இத்தகைய வணக்கம் ''இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க என்பதற்கு பொருந்தாது.

''மற்றாரும் தன்னொப்பாரில்லா தானே'', என்ற ஆசாரிய பெருமான்களின் திருவாக்குகளை அவமதிப்பதாகும். வணக்கத்திற்கு உரியவன் இறைவனொருவனே, அவனிடத்தில் வேறொன்றை வைத்து வணங்குவோமாயின் நாமே சிறுமையுற்று துரபிமானத்திற்கு ஆளாகி அழிய வேண்டும். இதனாற்றான் நபிபெருமான் (ஸல்) இறைவனுக்கு பூரணமற்ற பிற பொருட்களை இணைவைத்தலை வன்மையாக கண்டித்துள்ளார். ஆகவே, சிறுமையுடைய பொருட்களை வணங்கித் தீமையடைவதிலும் பெருமைதரும் பெருங்கருணைக் கடலாகிய இறைவனொருவனையே வணங்கி, அனைத்துயிரும் அவனுடைமையாதலை உணர்ந்து, அதன் பயனாகப் பெறப்படும் மனித குலத்தின் ஒருமைப்பாட்டை எண்ணித் துவேஷத்தை ஒழித்து வாழவேண்டியது சைவர்களது தவிர்க்கமுடியாத கடைமையாகின்றது.

இறைவனுடைய தலைமையை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு உயிரின் நலனும் இறை திருவுள்ளமென உணர்வானாயின் துவேஷத்திற்கு இடமேது? பிறர் நலம் பேணும் பண்பு நம்மிடையே வளர நாம் பிறரால் வரும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையும் நீதியுடையதாக அமையும். நாம் சொல்வதைப் பிறர் மறுக்காமலும் ஏற்றுக் கொள்வர். இத்தகைய பெரியோரை யாரும் ஒடுகக முடியாது, இதனையே சேக்கிழார் பெருமான்,

''தத்தம் பெருமைக்கு வரம்பாகிய சால்பின்மிக்க
எந்தம் பெருமக்களை யாவர் தடுக்க வல்லார்''

எனக் கூறினர்.

இறைவனுடைய ஆதிபத்தியத்தை ஏற்கும் சமுதாயம் சுரண்டல் (பரிக்கிரகத்தை) ஏற்கமுடியாது. அது மனிதரிடம் ஏற்றத் தாழ்வுகளை வளர்க்காது. ஆனால் சைவர்களே உங்கள் நிலை என்ன? நீங்கள் பெயரளவிற் சைவர்களாக வாழ்வதை விடுத்து உண்மைச் சைவர்களாக வாழ முயன்றால் இன்று நீங்கள் படும் துன்பங்கள் உம்மை அடையுமோ? உங்களிலே வறுமையுற்றவர்களும் அனாதைகளும் பெருகி வருகின்றார்கள் உங்களிடையே திறமை உள்ள வறிய பிள்ளைகள் கல்வி கற்க முடியாமற் திண்டாடுகின்றார்கள். சென்ற சந்திரதீபத்தில் நாம் காட்டியதுபோற் பல இளஞ்சிறார்கள் மதிய உணவின்றி பாடசாலைகளில் மயங்கி விழுகின்றார்கள். பஞ்சத்தைக் கண்டு வருந்தி இறை அருளால் திருவீழி மிழலையில் மக்கட்கு உணவளித்த எமது ஆசாரிய பெருமான்களின் வழி நடக்கின் மேற்படி நிலை நமக்கு வருமோ. ஆடம்பரத் திருவிழாக்கள், அரசியல் வாதிகளுக்கு நடுகல்லுகளும் ஆராதனைகளும், துவேஷத்தை வளர்க்கும் பிரசாரங்களுக்கும் பணச் செலவு! இவ்வாறு உங்கள் செல்வங்கள் வீணாகி அழிகின்றன. நல்ல நெறியில் வாழ முயலுங்கள்.

தொழிலும், கல்வியும், சுபீட்சமும் பெருகி வளரவேண்டிய நமது நாடு அடுத்தடுத்து இனக் கலவரங்களாலும் கொலைகளாலும் பிணக்காடாகி வருகின்றது. இத்தகைய ஒரு மயானத்தையோ உமது எதிர்காலச் சந்ததிகட்கு நீர் விட்டுச் செய்யப் போகின்றீர்கள்?

(தொடரும்)

# இத்தகைய நன்னெறியுடைய மாவிட்டபுரம் ஒலிபெருக்கி பாவனையால் ஏன் கெடுகிறது

தெல்லிப்பளை
10-8-81

சந்திரதீபம் ஆசிரியர் அவர்கட்கு

ஐயா,

தாங்கள் தங்கள் பத்திரிகையாகிய சந்திரதீபம் மூலம் எமது சைவ சமயத்தை வளர்க்கப் பாடுபடுவதையும் பிழையாக நடப்பவர்களை எவராயிருந்தாலும் குற்றம்கூறி திருத்தப் பார்ப்பதையும் அதனால் தாங்கள் அடையும் இன்னல்களையும் சைவ மக்களாகிய யாம் நன்கறிவோம். தற்போது பல இடங்களிலும் பலவித முன்னேற்றங்கள் அடைந்திருக்கின்றதென்பதை யாவருமறிவர்.

நிற்க சில இடங்களில் நல்ல முறையில் உற்சவம் நடைபெறுகின்றது. சில பிழைகள் இருந்தாலும் நல்லவற்றையும் எழுதி இன்னும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். யான் இவ்வருட மாவிட்டபுர உற்சவத்தின்போது ஆலய தரிசனம் கிடைக்க அருள் கிடைத்தது. சில முக்கிய திருவிழாக்களுக்குச் சென்று தரிசனம் செய்தேன். ஆனால் வேறு சில முக்கிய கோயில்களைப் போலன்றி மிகவும் அமைதியாகவும் இடிபாடின்றியும் உள்ளே சென்று தீபாராதனை முதலிய கிரியைகள் யாவற்றையும் கண்டு மெய்மறந்து நிற்கக் கூடிய சூழ்நிலை அங்கே இருந்தது. எவ்வளவோ சனக்கூட்டம் இருந்தும் எல்லோரும் வழிபடக்கூடிய முறையில் ஒழுங்காக இருந்தது. மேலும் தேர்த்திருவிழா அன்று பச்சை மலர்களாலும். பச்சை இலைகளினாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய சிம்மாசனத்தில் சண்முகப்பெருமான் வீற்றிருக்கச் செய்து நடனமாடிய காட்சியைக் காண பல கோடி கண்கள் வேண்டும் இதை நாவால் கூற முடியாது; இத்திருநடனக் காட்சியைக் காணப் பல கோடி மக்கள் வந்திருந்தனர். மற்றும் யாழ்ப்பாணத்தில் எக்கோயிலிலும் காணமுடியாத அளவு மக்கள் திரண்டு வந்து எதுவித சிரமமுமின்றி நடனத்லதக் கண்டு களித்தனர். நடனத்தின்போது அந்தணச் சிறார்களால் மலராலும் பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களினாலும் மழையென முருகன் மீது பொழிந்தும் பக்தர்களின் அரோகரா கோஷத்துடனும் பயிற்சி பெற்ற தொண்டர்களாக நடனம் செய்வித்த காட்சி அடியார்களை மெய்சிலிர்க்க வைத்தது.

இக்காட்சியைக் காணாத அடியார்கள் அடுத்த வருடங்களிலாவது இக்காட்சியைக் கண்டு பக்தி மேலிடும்படி செய்ய உங்கள் பத்திரிகையில் இக்கடிதத்தை பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். ஏனைய பிரசித்தி பெற்ற ஆலயங்களிலும் இவ்வாறான ஒழுங்குகளைச் செய்ய ஆதீன கர்த்தாக்கள் முன்வரவேண்டும்.

இப்படிக்கு
திருமதி சுப்பிரமணியம்

# என் கையைப் பிடித்து இழுத்து

## துயர் புரிந்து தம் பழுதுகளை உறுதிப்படுத்தினர் பொலிகண்டி கந்தவன எஜமான்

பொலிகண்டி கந்தவனக்கடவை எஜமான் திரு. யோகநாதன் என்பவர் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் முகாமையாளர் ஒருவருடன் கதைத்தபடி நின்றார். நானும் தற்செயலாக அங்கு போக நேர்ந்தது. என்னைக் கண்டதும் வேகமுடன் எழுந்தார். என்ன நீ அவங்களிடம் காசைவாங்கிக் கொண்டு கண்டபடி எங்கள் கோவில் கந்தவனத்தைப் பற்றி எழுதி விட்டாய். நீ யோகசாமி பேரில் கள்ளச் சம்பாத்தியம் செய்யவழி கண்டு கொண்டாய். உனக்கு ஆர் இச்செய்தி தந்தது. உன்னை முதல் திருத்து. உனது கோலத்தைப்பார் பேய் போல இருக்கிறாய். (நான் நாலு முழ வேட்டியும் ஒரு சால்வையும் அவர் கால் சட்டை சப்பாத்து ரிப்ரொப்பான வெள்ளையரின் யூனிபோம்) எனக் கூறியதும்; நான் சொன்னேன் கந்தவனக் கோயில் பற்றி நமக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கோயில் சம்பவங்கள் பற்றி விசாரித்தபோது சில உண்மை என அறிய நேர்ந்தது. ஆதலால் அக்கடிதத்தைப்பிரசுரித்தேன். தவறாயின் வேண்டிய நடவடிக்கை எடுங்கள் என்றேன். அவர் என்ன நடவடிக்கை உன் வீட்டை வந்து உனக்கு முறையான நடவடிக்கை எடுக்க இருந்தனான். நீ இங்கு இன்று அகப்பட்டுக் கொண்டாய் என தான் இருந்த கதிரையை விடுத்து எழுந்து என்னை அணுகி வந்தார்.

நான் அவரிடம் ஓர் பொது இடத்தில் வைத்து வாதாடல் முறையன்று. நான் மேல் வீட்டிற்குப் போறேன் என்று போதலும் நீ போய் விடுவாயோ என்று பின்னால் வந்து என் கையைப் பிடித்து இழுத்து துயர்புரிந்து நீ கோயிலைப் பற்றி எழுதினதற்கு இதில் வைத்து பதில் சொல்லு என தகாதவார்த்தைகளைப் பேசலும் அந்நேரம் காத்திராப் பிரகாரமாக அங்கு வந்த இளைஞர் ஒருவர் குறுக்கிட்டு யோகநாதனிடம் நீ ஏன் அப்பெரியவரைத் துன்புறுத்துகிறாய் அவர் கையை விடு என்று விடுவித்து நீர் ஆர் இந்த ஸ்தாபனத்தில் வேலை செய்பவரோ எனக் கேட்டலும் திரு. யோகநாதன் ஓம் நான் இங்கே தான் வேலை செய்கிறேன். (அதுவே பொய்) நீர் ஆர் அதைக் கேட்கிறது எனக் கூறலும் ஐக்கிய வியாபாரச் சிப்பந்திகளும் அங்கு வந்து இங்கு நின்று கலம்பகப்படாதையுங்கோ எனக் கூறிட நான் அந்நிலையில அவ்விடம் விட்டு நீங்கினேன்.

இந்நிலையில் யோகநாதன் சந்திரதீபம் ஓர் தெய்வீகப் பத்திரிகை என்பதை உணரட்டும். யாரோ ஒருவர் எழுதிய கடிதத்தைப் பிரசுரித்தமைக்காக என்னை வன்செயல் செய்ய யோகநாதன் எண்ணினால் அவரது கோயில் நிர்வாகம் சைவ நன்நெறிகட்கு முரணாகவே அமைந்துளது என்பதை நாம் சைவ மட்கட்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்நடத்தை உடைய பிராமணர்களையும் கபடப்பிரசங்கிகளையும் வேடதாரிச் சாமிகளையும் வெளிப்படுத்தி காட்டிய சந்திரதீபத்தை சைவ உலகம் உச்சிமேற் கொள்கிறது

## பிராமணர்கள் திருந்தாதிருந்தால் பூசைபண்ணும் புண்ணியத்தை சீக்கிரம் இழப்பார்கள்

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

இறையன்பும் பக்தியும் மிகுந்த சந்திரதீப ஆசிரியர் அவர்கள் அறிவது அடியேன் அல்லாரையூர் ஐயரின் அட்டூழியச் செயல்களைப்பற்றி எழுதியனுப்பிய கட்டுரையைப் பத்திரிகையில் போடாது அதற்குப் பதிலாக இங்கே அடியேன் எழுதியிருக்கிற தற்காலப் பிராமணர்களின் கொடுமைகள் என்ற கட்டுரையைப் போடவும். ஐயரின் அட்டூழியச் செயல்கள் என்ற கட்டுரையை அச்சில் போட்டு முடிந்தால் மாற்ற முடியாது தானே. அதை இதுவரை அச்சில் போடாதுவிட்டால் அதற்குப் பதிலாகக் கீழ்வரும் கட்டுரையைப் போடவும்; ஏனெனில் பத்திரிகையில் போட்டதை எங்களூர் ஐயர் கேள்விப்பட்டால் அடியேனுக்குப் பல தொல்லைகளை உண்டாக்குவார். அதைவிட எனக்கு அடிக்கவும் வருவான். ஐயனின் மகன்மார் இரண்டு பேர் கிடாமாடு போன்றவர்கள்; அடியேனுக்கு முன்னரும் பலமுறை அவர்கள் அடிக்க உத்தேசித்தார்கள் பத்திரிகையில் போட்டதாக கேள்விப்பட்டால் அடியேன் ஒழித்துத்தான் திரியவேண்டி நேரிடும்: ஆகலால் தயவு செய்து முன்னர் ஆராய்ந்து சிந்தியாது எழுதிய அக்கடிதத்தை இதுவரை அச்சிடாது விட்டால் அதற்குப் பதிலாக இக்கட்டுரையைப் போடவும். அடியேன் உங்களை நேரில் கண்டு சந்திரதீப அறப்பயிற்சி வளாகத்தைப்பற்றிக் கலந்துரையாட விரும்புகின்றேன். அடியேனால் இயன்றவரை உங்களுக்குச் சந்திரதீபத்திற்கு வேண்டி கட்டுரைகள் கோயில் விடயங்கள் போன்றவற்றைக் கடிதமூலம் அனுப்புகின்றேன். அடியேனுடைய அன்பர்கள் பலருக்குச் சந்திரதீபப் பத்திரிகையைக் காண்பித்தேன். அதற்கு அவர்கள் கூறியதாவது;

சந்திரதீபப் பத்திரிகை போன்ற கண்டனங்களை வெளியிட்டு மக்களிடையே பரப்பினால்தான் அவர்கள் தற்காலப் பிராமணர், மடாதிபதிகள், கபடப்பிரசங்கிகள் போன்றவர்களின் உள்ளத்தில் உள்ள விரோதமான செயல்களை உணர்ந்து அவர்களைக் கைவிட்டுத்தமாகவே பூவும் நீரும்கொண்டு நூற்றுக்கு பத்து வீத மாணவர்களாவது இறைவனை வழிபடுவார்கள். பிராமணப் பத்தகிகள் அவர்களுடைய புகழுக்கும் பொருள் சம்பாதிப்பதற்குமேயொழிய மக்களை உள்ளன்போடு வழிபடுவதற்கு ஏற்ற வழிக்குக் கொண்டு வரமாட்டாது. தருமமென்பது அருகி வருகிறதாகிய இக்கலியுகத்திலே சந்திரதீபத்தைப் போன்று மணி ஐயர் தங்கம்மா போன்ற கபடப்பிரசங்கிகளின் உள்ளக்கிடக்கைகளைப் பொதுமக்கள் அறியும்படி வெளிப்படுத்தி மக்களை வேடதாரிகளிடத்தில் கொண்டு மயக்கத்தை நீக்கி நல்லறிவுச் சுடர் பரப்பிய பத்திரிகையை இதுவரை நாம் கண்டதில்லை.

கோயில்களில் ஒலிபெருக்கி பாவித்து அடக்கமில்லாது மந்திரங்களைக் கத்துவதால்தான். நம்நாட்டில் சூறுவளி; பருவகாலத்தில் மழை இல்லாமை போன்ற கெடுதிகள் உண்டாகின்றன; உண்மையாக இந்தப் பிராமணர்களை நீக்கிவிட்டு கற்றறிவுள்ள ஆசாரசீலமுள்ள சூத்திர குலத்தவர்கள் அல்லது சைவர்களை கோயில்களில் பூசைக்கு வைத்தால் நம்நாட்டில் நல்ல மழை பொழியும். மிருசுவில் என்ற கிராமத்தில் உள்ள இருகோயில்களில் இப்பொழுது பிராமணர்களை நீக்கிவிட்டு ஆசாரமுள்ள வேளாளர்கள். அன்போடு தேவார திருவாசகபுராணங்களை ஓதிப்பத்தியுடன் பூசை செய்கிறார்கள். ஏனெனில் அக்கிராமத்தில் பல படித்த பெரியோர்கள் இருக்கிறார்கள்.

பிராமணர்கள் மூலஸ்தானத்திலும் மடைப்பள்ளியிலும் அரிசி தேங்காயெண்ணெய் பயறு வாழைப்பழம் வெற்றிலை பாக்கு முதலியவற்றை ஒழித்து வைத்து வயிற்றை வளர்ப்பதிலும், திருவிழா அபிஷேகம் முதலியவற்றைச் செய்து பணம் சேகரித்து வட்டிக்குக் கொடுத்தல், மோட்டார் சயிக்கில் வேண்டுதல் போன்ற தங்களுடைய நன்மையின் பொருட்டுக் கோயில்களில் பூசை செய்கிறார்களேயன்றி நாட்டுக்கு நயம் கருதியோ அல்லது கோயில்களின் நன்மை கருதியோ பூசை செய்யவில்லை. இவற்றையெல்லாம் வெளிப்படுத்திப் பிராமணர்களுடைய கபடச் செயல்களை வெளியிடுவதை முன்னிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். சந்திரதீப ஆசிரியரவர் அவருடைய சேவை மேலும் வளர்ச்சியடைந்து சைவ மக்களுக்கு நன்மையளிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். சந்திரன் பூரணையின் பின் தேய்ந்தாலும் பின்னர் பழமை போல் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருகலையாக வளர்கிறது. அது போல் சந்திரதீபமும் மேன் பிராமணர்கள் இடையூற்றினால் தேய்ந்தாலும் பழமைபோல வளர்ந்து வாழ்க.

இவ்வாறு பல அன்பர்கள் அடியேனுக்குக் கூறினர்.

ஆதலால் உங்களை ஒரு நாளைக்காவது நேரில் சந்தித்து உரையாட விரும்புகின்றேன் தயவுசெய்து அச்சுக்கூடத்தில் உங்களை எந்தக் கிழமைகளில் வந்தால் சந்திக்கலாம் என்று பதில் போடவும்.

தயவு செய்து அல்லாரை ஐயரின் அட்டூழியச் செயல்களுக்குப் பதிலாகக் கீழ்வரும் கட்டுரையைப் போட்டால் மிகவும் நல்லது.

விரைவில் பதில் போடவும்.

க. விக்கினேஸ்வரன்
முத்திலிங்கசாமி
கந்தசாமி கோயில் வீதி
அல்லாரை வடக்கு
கொடிகாமம்

## குறிப்பிட்ட கட்டுரை

அல்லாரை வடக்கு
கொடிகாமம்

இறையன்பும் பத்திமையும் பூண்ட சந்திரதீப ஆசிரியர் அவர்கள் அறிவது நீங்கள் உங்களுடைய பத்திரிகையில் பிராமணர்களையும் கபடப்பிரசாரகர்களையும் கண்டித்து வருவதை முன்னிட்டு அடியேன் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் சைவ சமய வளர்ச்சிக்கு முதற்குருவாக நின்று மற்றவர்களை நல்நெறியில் ஒழுகச் செய்ய வேண்டிய பிராமணர்கள் சமயநெறிக்கு முற்றும் விரோதமானவன் செயல்களைச் செய்தால், மற்றையவர்கள் எப்படியான செயல்களைச் செய்வார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ. மறை என்று வேதத்திற்குப் பெயர். அதன் கருத்து என்னவென்றால் மறைபொருட்களை உடையதும் மறைமுகமாக அமைதியாக ஓதப்படுவது என்பதாகும். அவ்வாறாகிய வேதமந்திரங்களை புகழுக்காகவும் பணத்தைச் சம்பாதிப்பதற்காகவும் ஒலிபெருக்கியில் குழறினால் உலகில் நம்நாட்டில் எவ்வாறு மழை பெய்யும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்தில் உள்ள பிராமணர்களெல்லோரும் ''கற்றாங்கு எரி ஓம்பி கலியை வாராமே செற்றார்'' என்று அவருடைய தேவாரத்திலும் ''அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்'' என்று திருக்குறளிலும் கூறியபடி அக்காலத்தில் இருந்த பிராமணர் ''ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்'' என்ற கருத்திற்கிசைய மிகுந்த ஒழுக்கமுடையவர்களாகவும் ஆசார சீலமுடையவர்களாகவும் விளங்கினார்கள். அதுவுமன்றி ''ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்'' என்ற விதி தவறாது தங்களுக்கு முக்கிய கடமையாகிய 'ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறு தொழில்களையும் செய்து தங்கள் கலாசார ஒழுக்கநெறி வழுவாது தன்னுயிர் போல் மன்னுயிர்களையும் பேணி உயிர்களிடத்து அன்பு, இரக்கம், தயை, பொறுமை இவைகளைக் கொண்டு ''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'' என்று கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் கூறியபடி சைவநீதி என்ற பயிரை வளர்த்து வந்தார்கள் என்பதைச் சம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய தேவாரப்பதிக மூலமாகவும், அவருடைய சரித்திர மூலமாகவும் நம்முன்னோர்கள் ஆராய்ந்து அறிந்த உள்ளம்.

''வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க'' என்று பெரிய புராணத்தில் உள்ளபடி சிவபாதவிருதையர் என்பவர் வேதநெறி வழுவாது சைவச்செந்நெறியாக ஒழுகி உயிர்களிடத்து அன்பு பூண்டு சைவ நெறியையும் தருமத்தையும் பேணிக்காத்து வந்தால்தான் அவரிடத்தில் திருஞானசம்பந்தராகிய ஞானக்குழந்தை மாணவர் திருஅவதாரம் செய்தார். இன்றுள்ள பிராமணர்கள் இவற்றைச் சிந்தித்து ஒழுகி சைவநெறிப்படி கிரியைகளை ஆசார முறையாகச் செய்து உயிர்களிடத்து அன்பு ஒழுகுவதை விடுத்து எம்பிரான் சம்பந்தமூர்த்திநாயனார் காட்டிய நெறிக்கு முற்றும் மாறுபாடாகவும், விரோதமாகவும் நடக்கிறார்கள்.

இவற்றைப் பிராமணர்கள் சிந்தித்துத் தங்கள் குலத்திற்கு தாங்களே இழிந்த பெயரையும் வசையையும் உண்டாக்கி விட்டோம் என்று உணர்த்து பார்க்கட்டும்.

இனி இன்றைய பிராமணர்கள் வகுத்து நடக்கும் முறைகள்.

அவர்கள் செய்யும் அறு தொழில்கள். சினிமாப்பாடல்களைப் பாடல், பாடுவித்தல், சினிமாப்படம் பார்த்தல், மற்றையவர்களைப் பார்ப்பித்தல், சினிமாப்பாடல் புத்தகங்களையும் காதல் சம்பந்தமான புத்தகங்களையும் வேண்டி இளம் பிராமணர்களுக்குக் கொடுத்தல் ஏற்றற்குப்பதிலாக களவாக மூலத்தானத்திலும், மடைப்பள்ளியிலும் தேங்காயெண்ணெய், அரிசி, பயறு முதலிய பொருட்களை ஒளித்துவிட்டு ஊர்மக்களிடம் சாணுதென்று பணத்தையும் அரிசி போன்ற பொருட்களையும் வலோற்காரமாகப் பறித்தல் ஆகிய அறு தொழில்களையும் செய்கிறார்கள்.

ஐம்புலன் அடக்கம் என்பது பூசை நேரத்தில் சூத்திரப் பெண்களுக்குக் கண் அடித்தல் வாய்நிறைய வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு பூசை செய்தல், மூக்குப்பொடி போடல், கோயில் ஒலிபெருக்கியில் தேவையற்ற கீழ்த்தரமான சினிமாப் பாடல்களைக் கேட்டல், உடம்புக்கினிய உற்சாகப் பதனீர்கள் பாவித்தல் போன்றன.

சில பிராமணர்கள் தங்கள் பூநூலைச் சேட்டிற்குள் மறைத்துக் கொண்டு மதுபானம் பாவிக்கிறார்கள். சேட்டுப் போடாதவர்கள் பூநூலை வேட்டிக்குள் செருகிவிட்டுக் குடிக்கிறார்கள். சாவகச்சேரியில் உள்ள சைவக் கடையில் ஒரு பிராமணன் பூநூலை வேட்டிக்குள் மறைத்துவிட்டுத தேநீர் குடித்து இடியப்பம் சாப்பிட்ட கதை இன்றும் பலருக்குத் தெரியும். துன்னாலை என்ற ஊரைச் சேர்ந்த பிராமணன் ஒருவன் சுடுதண்ணீரைக் கிண்ணத்தில் விட்டுப் பட்டுத்துண்டால் மூடி பார்ப்பவர்களுக்கு அமுதுநிவேதனம் செய்வதுபோல் பாவனைபண்ணி அதைக் கோயில் மணியகாரன் அறிந்து ஒருநாள் ஐயா கொஞ்சப் பிரசாதம் தந்தால் நல்லது எனலும் அதற்கு ஐயர் கண்களைப் பிரட்டி முளிசிவிட்டு நிற்ப மணியகாரன் சுடுதண்ணீர் கிண்ணத்தைத் திறந்து பார்த்துவிட்டு ஐயருடைய குடுமியில் பிடித்துக்கொண்டு ஈர்க்குப்பிடியால நாலு பூசை கொடுத்த வரலாறு இன்றும் பல துன்னாலையூர் மக்களுக்குத் தெரியும். நாகர் கோவிலுக்கு அடுத்துள்ள செம்பியன் பற்று என்ற ஊரில் தோட்டம் செய்து கொண்டிருந்த துன்னாலைப் பிராமணன் மீன் காய்ச்சித் தின்றதும் நாகர் கோவிலைச் சேர்ந்த ஒரு பெரியார் அப்பிராமணனுடைய சீர்கேட்டைப் பாட்டாகப்பாடி அச்சிட்டுப் பரப்பிய கதையும் இன்று உண்டு.

இவ்வாறு பிராமணர்கள் செய்கின்ற கொடுமைகளை எடுத்து எழுதினால் சந்திரதீபத்தில் இடம் போதாது;

இப்படிப் பெரிய பிழைகளைப் பிராமணர்கள் செய்தால் அவர்களுடைய குடுமியை அறுத்து அவர்களிடமுள்ள பொருட்கள் எல்லாவற்றையும் பறித்து அவர்கள் இருக்கின்ற ஊரினின்றும் துரத்திவிடுதல் வேண்டும் என்று புராணத்தில் சொல்லப்படுகிறது.

## இப் பத்திரிகை பற்றிய தகவல்

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் வசிக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப தவநெறி வளாகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 30-8-1981 ஆகும் தொடர்புகட்கு ஆசிரியர், சந்திரதீபம், கொக்குவில் என விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். இதன் வருட சந்தா ரூபா 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org